
SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16-30 செப்டம்பர் 2026 ₹25
Volume : 47 Issue : 07
www.samarasam.net

சட்டமன்றமா?
சண்டை மன்றமா?



இஸ்லாமிய எதிர்ப்பிலிருந்து
இறையச்சத்தை நோக்கி..!
- யோரான் வான் கிளாவரென் நேர்காணல்




# பசிபிக் பெருங்கடலின் எச்சரிக்கை



## ஆளுமை மேம்பாட்டிற்கு 10 அம்சத் திட்டங்கள்

ZIAS
INNOVATIVE TECHNOLOGIES PRIVATE LIMITED

*Upgrade Your Skills For a Brighter Future*

# ZIAS ACADEMY

## AI-POWERED SKILL DEVELOPMENT & PROFESSIONAL TRAINING

**Learn Today. Build Skills.**
**Grow Your Career.**




### Digital Marketing
Build your brand, reach your audience, & grow online.

### AI Software Development
Build intelligent solutions for a smarter tomorrow.

### AI Web Designing
Create stunning web experiences with AI tools.

### Power BI / Data Analytics
Turn data into meaningful insights.

### Data Science & AI
Solve real-world problems with data & AI.

### Agentic Software Development
Build AI agents for autonomous & smarter systems.

- Hands-on Training
- Industry-Oriented Projects
- AI Tools & Practical Learning
- Certification & Career Skills

**EZYCAMPUS**
CAMPUS MANAGEMENT SOFTWARE

**SOFTWARE DEVELOPMENT**
CUSTOM APP DEVELOPMENT



**E-ACADEMY**
DIGITAL MARKETING-B2B,B2C,CT

**E-COMMERCE**
SEEMATTISTORES.COM


ZIAS

ZIAS INNOVATIVE TECHNOLOGIES PRIVATE LIMITED - INDIA.
https://ziastech.in/ info@ziastech.in +91 93453 87413




## உள்ளே...

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி




8 சட்டமன்றமா? சண்டை மன்றமா? ● தலையங்கம்

10 பசிபிக் பெருங்கடலின் எச்சரிக்கை ● ப. அப்துர் ரஹ்மான்

14 இஸ்லாமிய எதிர்ப்பிலிருந்து இறையச்சத்தை நோக்கி..! ● யோரான் வான் கிளாவரென் நேர்காணல்

19 சிறிய உதவிகளின் பெரிய பலன்கள் ● அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

20 சஹாரன்பூர் பள்ளிவாசல் இடிப்பு : மக்கள் ஆட்சிக்கே களங்கம் ● ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துணைத்தலைவர் கடும் கண்டனம்

22 தனிமனித வழிபாடு மக்களாட்சியைத் தடம் புரளச் செய்துவிடுவது எப்படி? ● நிருபமா ராவ்

30 மேடை : ஆளுமை மேம்பாட்டிற்கான பத்து அம்சத் திட்டங்கள் ● K. ஜலாலுத்தீன்

35 முன்மாதிரித் தலைவர் முஹம்மத்(ஸல்) ● ஷமீம் ரியாஸ்

38 இஞ்சி ● டாக்டர் P.A. முஹம்மது இக்பால்

41 கவிதை : கொள்கைக்கு ஒரு புத்தாடை ● ஆரூர் புதியவன்

42 மாற்றத்தின் பூங்காற்று ● T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

45 எழுந்திரு! ● மு.நசீஹா பர்வீன் முபல்லிகா

46 நாவல் : அக்கரைப் பச்சை ● ஜரினா ஜமால்

50 நேபாளத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நேரடி கள ஆய்வு















ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*
**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு விளம்பரத் தொடர்புக்கு :*
**M. அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*
**samarasam.advt@gmail.com**

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

Creative Communication Chennai
SCAN & PAY
UPI ID: creative3142@sbi

சமரசம் சந்தாக்கள், விளம்பரக் கட்டணங்களை அனுப்ப QR Codeஐ Scan செய்யவும்



பொறுப்பாசிரியர், சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

## குடிமகன்கள் நல்ல குடிமக்களாக மாற..!

மதுவின் அணைப்பில் மதி உறங்கி கொண்டிருக்கும் வேளையில், மானம் மரியாதை வீதிக்கு வந்து விடுகிறது. பாதை தெரியாமல் போதை என்ற வட்டத்திற்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கும் குடி மகன்கள் அதனை விட்டு வெளியில் வர வேண்டும். நல்ல குடிமக்களாக மாற வேண்டும். குடியை மறக்க வேண்டும். மது போதைக்கு எதிரான சிறப்பிதழ் தெளிவைக் கொடுத்தது.

– எம்.எஸ். பாரூக், திருப்பாலத்துறை

## முடிந்து போன பிரச்னை

இஸ்லாமிய சமுதாயத்தில் அப்துர் ரகீப், டாக்டர் ஜெ.சதக்கதுல்லாஹ் போன்ற அறிவுஜீவிகள் செய்துள்ள அரும்பெரும் சாதனைகள் மூலம் இஸ்லாமியச் சமுதாயம் கல்வித் துறையில் மேலும் மேலும் முன்னேற வேண்டும் என்று உள்ளம் துடிக்கின்றது. வட்டியில்லா வங்கி முறை இந்தியாவில் நிலைநாட்ட அரும்பாடு படும் H.அப்துர் ரகீப் அவர்களுக்கு அல்லாஹ் அருள்புரியட்டும்.

இஸ்லாமியர்கள் ஓர் இறைவனை வணங்குபவர்கள் என்ற விஷயம் இந்திய குடிமக்கள் அனைவரும் அறிந்த ஒன்றே! வேண்டுமென்றே வலுக்கட்டாயமாக காளியையும் லட்சுமியையும் ஏற்றுக் கொண்டு வந்தே மாதரம் பாடலைப் பாட வேண்டும் பாடாமல் அவமதித்தால் சிறை தண்டனை என்பது இந்திய மதச்சார்பின்மைக்கு எதிரானது. 75 ஆண்டுகளுக்கு முன்பே வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டு முடிந்து போன பிரச்னை இது. நாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்க வழியற்று தங்களின் கையாலாகாத தன்மையை மறைக்க, திசை திருப்பும் முயற்சியே இது. மதச்சார்பற்ற சக்திகள் சட்டத்தைத் திரும்பப் பெறும் வரை சளைக்காமல் எதிர்ப்புக் குரல் எழுப்புவது காலத்தின் கட்டாயமாகும்.

– S.A. சபீர் அஹ்மது,
ஆணைக்காரன் சத்திரம்



## மக்கள் திருந்த வேண்டும்

போதையின் வலிமை அதனால் ஏற்படும் தீமைகள் சமரசம் சிறப்பிதழின் அனைத்துப் பக்கங்களிலும் விலாவரியாகச் சொல்லப்பட்டன. டாக்டர் ஜெ.முஹையுதீன் மூன்று கட்டுரைகளிலும் ரத்தினச் சுருக்கமாக மது, போதையின் பெருந்தீங்கைப் பற்றிச் சொல்லி விட்டார். அவருக்கு என் வாழ்த்துகள். மக்கள் திருந்த வேண்டும். திருந்தாத வரையில் மதுவை ஒழிக்க முடியாது.

– T.M. பெரோஸ்கான், விருத்தாச்சலம்

## வாழ்த்துகள்

சமரசம் இதழ் ஆசிரியர் H.அப்துர் ரகீப் அவர்களுக்கு SDPI காயிதே மில்லத் விருது வழங்கியது மகிழ்ச்சி. வாழ்த்துக்கள்!

– M. ராதாகிருஷ்ணன், வாணியம்பாடி

## செயல்வடிவம் பெறுமா?

மதுவும் போதையும் இல்லாத தமிழ்நாடு மலர, ஆக்கப்பூர்வமான செயல்முறையை வகுத்து பரிந்துரைகள் அளித்துள்ள கட்டுரையாளர் பாராட்டுக்குரியவர். மாநிலத்தில் உள்ள மொத்தம் 4,675 மதுபானக் கடைகளில் முதல் கட்டமாக 717 கடைகளை அதிரடியாக மூடுவதற்கும், மீதமுள்ள கடைகளைப் படிப்படியாக மூடுவதற்கும் முதலமைச்சர் ஆணையிட்டிருப்பது சற்று ஆறுதல் அளித்தாலும், 2,000 கடைகளைத் தனியார்மயமாக்கும் செய்தியும், அண்மையில் ஆன்லைன் முன்பதிவு வசதியுடன் மது விநியோகம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதும் மிகுந்த வேதனையை அளிக்கின்றன.

‘போதையில்லாத தமிழ்நாட்டை உருவாக்குவோம்’ என்ற கவர்ச்சிகரமான வாசகம் செயலளவில் இல்லாமல் வெறும் சொல்லளவில் மட்டுமே நின்றுவிடுமோ என்ற ஐயம் எழுகிறது. ஏனெனில் தேர்தலின் போது அள்ளி வீசப்பட்ட வாக்குறுதிகளில் பலவும் இன்னும் நிறைவேற்றப்படாத நிலையில், பொறுப்பேற்றிருக்கும் அரசு இவ்விஷயத்தில்

உறுதியாகச் செயல்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

- A.Z. ரஃபீக் அகமது, ஆம்பூர்

## எல்லோருக்குமான அறிவுரை

சமரசம் ஆசிரியர் அவர்களுக்குக் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் விருது கிடைத்திருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி! வாழ்த்துகள்.

மது, போதையில்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம் எனும் கட்டுரையை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் மாநிலத் தலைவரின் அசைக்க முடியாத நம்பிக்கையும் அதற்கான வரைவு, முன்னெடுப்பும் சிறப்பு. டாஸ்மாக் மூடப்படுவது மட்டுமல்லாமல் கள்ள மது பெருகிடாது கண்காணிப்பும் தண்டனையுமே தமிழகத்தைத் தலை நிமிர வைக்கும். வாழ்க்கைப் பாடங்கள் - 101 அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது அவர்களின் பெற்றோரைப் போற்றும் பிள்ளைகளாக கட்டுரை இஸ்லாமிய சகோதரர்கள் மட்டுமல்லாது அனைத்து மதத்தினருக்கும் ஏற்ற அறிவுரையாக இருந்தது. முதுமையில் தாய் தந்தையர் மீது பரிவு காட்டும் அக்கறையை வளர்ப்பதில் திருமறை சொல்லும் கருத்துகள் அளவிடற்கரியது.

- சோழா புகழேந்தி, கரியமாணிக்கம்

## மனிதனின் மடமை

வந்தே மாதரம் திணிப்பு மதச் சுதந்திரத்திற்கு எதிரானது மட்டுமல்ல அரசியல் சாசனத்திற்கும் எதிரானதுதான். மது, போதைக்கு எதிரான சிறப்பிதழ் அனைத்து ஆக்கங்களும் மது, போதையின் தாக்கங்களைத் தெளிவாக எடுத்து கூறியது. சகலத்தையும் சிதைத்து விடும் போதை என்பது தெளிவாகத் தெரிந்தும் அதை நாடுவது மனிதனின் மடமையே. குடிமகனின் வாழ்வை சிறுகதை மூலமாகப் பலருடைய வாழ்க்கையும் படம்பிடித்து காட்டியுள்ள சிறுகதையாசிரியருக்கு பாராட்டுகள். ஆபரேஷன் தூஃபான் மற்ற மாநிலங்களும் பின்பற்றினால் இந்தியா போதை இல்லா நாடாக மிளிர முடியும்

- சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## படம்பிடித்த சிறுகதை

மதுவும், போதையும் மனிதனை ஆட்டிப் படைப்பது சமூக வீழ்ச்சியின் குறியீடு. போதை மனிதனை பல்வேறு உபாதைக்கு ஆளாக்கும் என்பதைத் தெளிவுபட விளக்கி அதற்கு இஸ்லாம் முன்வைக்கும் தீர்வையும் டாக்டர் முஹையுதீன் முன்வைத்துள்ளார். மது, போதையிலிருந்து மனிதனை மீட்கும் சமரசத்தின் முயற்சி பாராட்டுக்குரியது. குடிமகன் சிறுகதை குடிகாரர்களின் நிலையைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. கமாலுதீனுக்கு வாழ்த்துகள்.

- ப.குருசாமி, தேனி

## மனக்கட்டுப்பாடு அவசியம்

மதுவை ஒழிப்பதற்கு அதற்கான மாற்று வழிகளைச் சொல்லிய சமரசத்தின் பணி பாராட்டுக்குரியது. மதுவை ஒழிக்க வேண்டுமென்றால் மனக்கட்டுப்பாடு அவசியம். மதுவினால் குடும்பங்கள் சீரழிகிறது. சாலை விபத்துகள், மோதல்கள், பண விரயம் எனப் பல கேடுகள் உள்ளன. மது இல்லாமல் வாழ முடியும். குடிமகன் சிறுகதை மிகவும் சிறப்பு. ஆபரேசன் தூஃபான் போல் இங்கும் பல திட்டங்களை முன்னெடுத்து மது, போதையை ஒழிக்க வேண்டும். வந்தே மாதரம் பாடலை அவமதித்தவர்களுக்கு மூன்று ஆண்டுகள் சிறையும், அபதாரமும் விதிக்கப்படும் என்பது ஏற்புடையதல்ல. சமரசம் ஆசிரியருக்கும், சேயன் இப்ராகிமுக்கும் விருது வழங்கப்பட்ட செய்தி மகிழ்வைத் தருகிறது.

- இரா.சண்முகவேல், கீழக்கலங்கல்

## சமூகத்தின் பிரச்னை

சமரசம் ஆசிரியருக்கு விருது கிடைத்திருப்பதில் பெரும் மகிழ்ச்சி. வட்டி இல்லா வங்கி உருவாக அரும்பாடுபடுபவர் அப்துர் ரகீப். வங்கியல் துறையில் முத்திரை பதித்த டாக்டர் ஜே.சதக்கத்துல்லாஹ் அவர்களின் இழப்பு பேரிழப்பு. போதை தனிநபர் பிரச்னை அல்ல. தலைமுறையையே அழித்து நாசப்படுத்திவிடும். போதை இல்லா தமிழ்நாட்டை உருவாக்க அனைவரும் முன்வர வேண்டும்.

- S. அஜித்தா, M. லைலாம்மா,
S. மகுதனன், தேனி

# பள்ளிப் பாடப்புத்தகத்தில் மது, போதையின் தீமைகள் குறித்து இடம் பெற வேண்டும்

**16–31** ஆகஸ்ட் சமரசம் இதழ் முழுவதும் வருங்காலச் சமுதாயத்தினருக்கு வழி காட்டக்கூடிய வகையில் சிறப்பாக இருந்தது. Dr. முஹையுதீன் போதை எவ்வாறெல்லாம் வாழ்க்கையை விழுங்குகிறது என்பதை அட்டவணை போட்டுக் காட்டி இருந்தார். அனைத்துப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் இம்மாத கட்டுரைகளின் சாராம்சம் சென்றடைய வேண்டும்.

சிகரெட், மதுவில் வாய் நாறும். வெளியில் தெரிந்துவிடும். ஆனால் 'கூல் லிப்' வகையறாக்களில் வாய் நாற்றம் இல்லை, வெளியே தெரியாது. சாதாரணமாகக் கண்டுபிடிப்பது கடினம். வகுப்பறையில் எதுவும் பேசாமல், கேட்டாலும் பதில் அளிக்காமல், தனிமையிலேயே இருக்க முயல்பவனை அதட்டிக் கேட்டால் மூர்க்கமான, சம்பந்தமில்லாத பதில் வரும் போதுதான் தெரியும் இவற்றைப் பயன்படுத்துபவர்களின் நிலை. இப்படிப் பட்டவர்களிடம் என்ன கற்றலை, என்ன தேர்ச்சியை எதிர்பார்க்க முடியும்?

பாக்கு, பான் மசாலா, குட்கா, ஜர்தா, கூல் லிப் என்று வளர்ந்து விரிந்து கொண்டே செல்கிறது. மறைந்து, மறைந்து கடைகளில் போய் வாங்கும் நிலை மாறி Whats App, telegram group மூலம் order செய்து Door Deliveryயாக Amazon, Flipkart போல மாணவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து சேரும் அளவிற்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது வேதனைக்குரிய விஷயம்.

கப்ளிசேட் எழுதிய கட்டுரையில் ஆல்கஹால் அணுக்கள் சிறியதாக இருப்பதால் நொதிகளின் உதவியுடன் செரித்து ரத்தத்தில் கலக்காமல் சவ்வூடு பரவல் மூலம் நேரடியாக ரத்தத்தில் கலந்து உடனே போதை ஏறி காலம், நேரம், தூரம், வேகம் ஆகியவற்றை மதிப்பீடு செய்வது முடியாததாகிறது என்ற புதிய தகவலை மாணவர்களுக்குப் புரியும் வகையில் அவர்களின் பாடத்தில் உள்ள சவ்வூடு பரவல் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி அழகாகக் கூறியுள்ளார்.

பெரும்பாலான பள்ளிகளில் M.I.periods என்பது Time tableஇல் தான் உள்ளது. நடத்துவதற்கு ஆள் இல்லை. Result, Result என்று Resultஇன் பக்கமே ஓடுபவர்களுக்கு ஒழுக்கக் கல்வியைப் போதிக்க வேண்டும் என்ற அக்கறையே வருவதில்லை. பாடத் திட்டத்திலேயே மேலும் கூடுதலாக ஒழுக்கக் கல்வி சேர்க்கப்பட்டு அதில் தேர்வுக்குரிய வினாக்களும் இடம் பெற வேண்டும். 10 ஆம் வகுப்பு அறிவியல் பாடப் புத்தகத்தில் எத்தனால் தயாரிக்கும் முறை உள்ளது. அதை அகற்றிவிட்டு மதுவால் ஏற்படும் பாதிப்புகளையும், விளைவுகள் பற்றிய விழிப்பு உணர்வுச் செய்திகளையும் அனைத்து வகுப்புப் பாடப் புத்தகங்களிலும் சேர்க்க வேண்டும்.

எழுத்தாளர் சிவசங்கரியின் 'ஒரு மனிதனின் கதை' என்ற நடிகர் ரகுவரன் நடித்த documentary பள்ளிகளில் மாணவர்களுக்குப் போட்டுக் காட்ட வேண்டும். இந்த ஆவணப் படத்தை திருச்சியில் உள்ள காஜாமலை மகளிர் மன்றம் நடத்தும் போதை மறக்கடிக்கும் மருத்துவமனையில் தினந்தோறும் நோயாளிகளுக்குப் போட்டுக் காட்டுகின்றனர். அங்குள்ள மருத்துவர்கள் காய்ச்சல் ஒரு வியாதி அதற்கு சிகிச்சை உண்டு, ஜலதோஷம் ஒரு வியாதி அதற்கு சிகிச்சை உண்டு, அது போல போதைக்கு அடிமையாதலும் ஒரு நோய் அதற்கும் சிகிச்சை உண்டு என்கின்றனர்.

நான் பணியாற்றும் ஆவணியாபுரம், திகிரசண்ட் மேல்நிலைப் பள்ளியின் காலை வழிபாட்டுக் கூடத்தில் மாணவர்கள் மத்தியில் சமரசம் இதழைக் காட்டி போதைக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம் என்று கூறி மாணவர்களை 31.8.26 அன்று உறுதிமொழி எடுக்கச் செய்து விழிப்பு உணர்வு அடையச் செய்ததில் நானும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

– ஐ. மஹபூப்ஜான், ஆடுதுறை

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்

# Muslim Educational Promotion & Counseling Organization of Tamilnadu (MEPCOT)

## முஸ்லிம் கல்வி மேம்பாட்டுக் குழுமம் - தமிழ்நாடு

**அறிவிப்பு**

பொருளாதார வசதியில் தாழ்ந்த நிலையிலிருக்கும் மாணவ-மாணவியருக்கு கல்விக்காக உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

**உதவித் தொகை வழங்கப்படும் துறைகள்**

மருத்துவம், பொறியியல், இதழியல், செவிலியர் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி(B.Ed), தொழிற்கல்வி(ITI), சட்டக் கல்வி, டிப்ளமோ.

### For Communication & Correspondence

**MEPCOT (Labbaik Educational Trust)**
**C/o. M.Abdul Azeez,**
**69/31, North Kudiana Street,**
**Melacauvery - 612 002.**
**Kumbakonam, Thanjavur Dt**

விண்ணப்ப படிவம்
QR Code

Applications can be downloaded from the QR Code or Sending the mail to mepcosa@gmail.com or Copy this link to fill the form **https://forms.gle/ovugW3cc9cDfLxHQ9**

**விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ள இறுதி நாள் : 30.09.2026**

1. விண்ணப்பதாரரின் சமீபத்திய புகைப்படம்
2. கல்லூரியில் சேர்ந்ததற்கான சான்றிதழ்
3. மதிப்பெண் பட்டியலின் நகல்கள்
4. ஜமாஅத் சான்றிதழ்
5. மாற்றுத் திறனாளிகள், பெற்றோரை இழந்தவர்கள், பெற்றோர் பள்ளி வாசலில் பணிபுரிபவராக இருந்தால் அதற்குரிய சான்றுகளை இணைக்கவும்.

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர இறுதி நாள் : 28.10.2026**

**(Regd. Office)**

**MEPCOT**
**LABBAIK EDUCATIONAL TRUST**
**P.O. Box-3, Thirumangalam 625 706, Madurai.**

சரம் : 47
மலர் : 07

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

1448 ரபியுல் ஆகிர் 4 - 18 ● 2026 செப்டம்பர் 16-30

# சட்டமன்றமா? சண்டை மன்றமா?

முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு நடைபெற்ற 17ஆவது சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தொடர் மே 11 முதல் மே 13 வரையும், பின்னர் ஜூன் 18 முதல் ஜூன் 23 வரையும் நடைபெற்றது. பட்ஜெட் கூட்டத்தொடர் ஆகஸ்ட் 5 தொடங்கி செப்டம்பர் 8ஆம் தேதிவரை நடைபெற்றது. மொத்தம் 28 நாள்கள் நடந்த பேரவைக் கூட்டம் 170 மணி 6 நிமிடங்கள் நடைபெற்றன.

தமிழ்நாடு சட்டப்பேரவை நிகழ்வுகளை 28 நாள்களில் 32 ஆயிரம் பேர் நேரிலும் இலட்சக்கணக்கான மக்கள் நேரலையிலும் பார்த்தனர். ஆளுநர் உரை, பொது பட்ஜெட், வேளாண் பட்ஜெட், பட்ஜெட் மீதான விவாதம், பதிலுரை, துறை வாரியான மானியக் கோரிக்கைகள், விவாதங்கள், கேள்வி பதில்கள், விதி 110இன் கீழ் பல்வேறு முக்கிய அறிவிப்புகள், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தனித் தீர்மானங்கள் எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

ரூ.6,220 கோடி பயிர்க்கடன் தள்ளுபடி, மருத்துவக் காப்பீடு ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம், எம்.எல்.ஏ.க்களுக்கு அரசு வாகனம், ஆண்டுக்கு 3 இலவச சிலிண்டர்கள், பெண்கள், திருநர்களுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம், ரூ.55,628 கோடி மின் திட்டங்கள், சிறுபான்மையினர் வழிபாட்டுத் தலங்களுக்கு வட்டியில்லா கடன் திட்டத்திற்கு 100 கோடி சுழல் நிதி ஒதுக்கீடு, ரூ.4,800 கோடி கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம், டிஜிட்டல் டிரைவிங் லைசென்ஸ், போராட்ட வழக்குகள் வாபஸ், புதிய தலைமைச் செயலகம், பரந்தூர் விமான நிலையம் கைவிடப்பட்டு வேறு இடம் தேர்வு செய்யப்படும் எனப் பல்வேறு அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன.

பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும், NEET முறையை நீக்கி பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையிலான மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு வழிவகுக்க மத்திய சட்டங்களில் மாற்றம் செய்ய வேண்டும். FCRA திருத்த மசோதாவைத் திரும்பப் பெற மத்திய அரசை வலியுறுத்துதல், தொகுதி மறுவரையறையால் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படக்கூடாது, 2010 ஆகஸ்ட் 23க்கு முன்பு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில்(TET) இருந்து முழுமையான, நிரந்தர விலக்கு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துதல், சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை முதன்மை மொழியாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத் தொடரில் அமைச்சர்களின் பேச்சுகளை ஆளுங்கட்சி சபா நாயகரே அவைக்குறிப்பிலிருந்து நீக்கியது, அமைச்சரின் மைக் இணைப்பைத் துண்டித்தது குறிப்பிடத்தக்கது. இலஞ்சம் கொடுத்ததாக அமைச்சரின் பேச்சு, அமைச்சரின் பவுடர் வீடியோ சர்ச்சை, கரூர் கம்பெனி, சங்கி அமைச்சர், பாத்ரூம் அமைச்சர், G Square மாப்பிள்ளை, லாட்டரி மருமகன், முஸ்லிம்கள் தீவிரவாதிகள் என்று திமுக சொன்னதான குற்றச்சாட்டு, குதிரை பேர விவகாரம், 'அப்பாவைக் காணோம்' என்று தொடங்கி மிசாவைக் குறித்த மிக மோசமான உடல் மொழி வரையிலான முதலமைச்சர் விஜயின் நடவடிக்கைகள் எனப் பல்வேறு விரும்பத் தகாத நிகழ்வுகளும், சர்ச்சைகளும் அதிகமாக நடந்துள்ளன.

மக்கள் நேரலையில் பார்க்கின்றார்கள் என்ற எண்ணமும், சட்டசபையின் மாண்பையும் கருத்தில் கொள்ளாமல் அவைக்குறிப்பிலிருந்து நீக்கும் அளவிற் கான பேச்சுகள் ஆளும், எதிர் தரப்பினரிடமிருந்து வெளிவந்த வண்ணம் இருந்தன. ஆளும் கட்சிகள் மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதும், அதற்குப் பதிலளிப் பதும் இயல்பே. ஆனால் இங்கு தலைகீழாக கடந்த ஆட்சி குறித்த குற்றச்சாட்டு களும், அதற்கு எதிர்க் கட்சிகளின் எதிர்ப்புகளும்தான் அதிகமாக இருந்தன.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள தவெக அரசுக்குக் கூடுதல் பொறுப்பு இருக் கின்றது. திமுக மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் தம் மேசையின் மீது மூன்று கோப்புகள் இருப்பதாக முதலமைச்சர் விஜய் சொல்கிறார். நடவடிக்கை எடுக்க வேண்டிய ஆட்சியையும், அதிகாரத்தையும் கையில் வைத்துக் கொண்டு ஏன் இந்த மிரட்டலை முதல்வர் விட வேண்டும்? கடந்த 116 நாள்களில் சுமார் 550 குற்றச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதில் 200 கொலைகள், 300க்கும் மேற்பட்ட பாலியல் வன்கொடுமைகள், 8 காவல் சிறை மரணங்கள், 10 ஆணவக் கொலைகள் நடந்துள்ளது குறித்து காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் எந்த பதிலுரையும் இல்லாமல் பதிலளிக்க வேண்டிய பொறுப்பிலுள்ள முதலமைச்சர் விஜய் மிசா, சர்க்காரியா, அமலாக்கத்துறை குற்றச்சாட்டுகள் என்று பேசியது பொருத்தமானது அல்ல.

மக்களின் பணத்தில் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் நடத்தப்படும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் மக்கள் நலத்திட்டங்கள் குறித்த விவாதங்களுக்கு முக்கியத்துவம் தராமல் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதிலும், தனிநபர் தாக்குதலில் ஈடுபடுவதும், தரமற்ற வார்த்தைகளால் மோதிக் கொள்வதும், சைகை செய்வதும் தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குச் செய்யும் துரோகம் ஆகும். 'சட்டமன்றக் கூட்டத் தொடரைப் பார்ப்பவர்கள் நம்மைக் குறித்து என்ன நினைப்பார்கள்?' என்று சபாநாயகரே கேட்கும் அளவிற்குத்தான் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றது என்பது வேதனைக்குரியது.

மக்களுக்கு முன்மாதிரியாகத் திகழாவிட்டாலும் பரவாயில்லை. மோசமான முன்னுதாரணங்களாக சட்ட மன்ற நடவடிக்கைகள் மாறிவிடக் கூடாது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கும் அளவிற்கான பேச்சுகளைத் தவிர்த்துவிட்டு ஆக்கப் பூர்வமான முறையில் சட்டமன்றத்தை நடத்த வேண்டிய பொறுப்பு அனை வருக்கும் இருக்கின்றது. கூடுதலாக ஆளும் கட்சிக்கும், முதலமைச்சர் விஜய்க்கும் இருக்கிறது.

# பசிபிக் பெருங்கடலின் எச்சரிக்கை

● ப. அப்துர் ரஹ்மான்

**ஒவ்வொரு ஆண்டும் கோடை காலம் தொடங்கிவிட்டாலே, 'அடடா என்ன வெயில் என்ன வெயில்..! தாங்க முடியல! கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வெயில் அதிகம் என்ற புலம்பல் தமிழ்நாட்டின் வீடுகளிலும், பேருந்துகளிலும், அலுவலகங்களிலும் தேநீர் கடைகளிலும் ஒலிக்கத் தொடங்கிவிடும். ஆனால் இந்தப் புலம்பல்கள் உண்மை தானா என்பதை அறிவியலின் ஒளியில் தேடிப் பார்ப்போம்.**


## சூரியக் கதிர்வீச்சு

சூரியனிலிருந்து ஒளி, வெப்ப ஆற்றலைக் கொண்ட கதிர்வீச்சு பூமியை நோக்கி வருகிறது. இந்தக் கதிர்வீச்சில் ஒரு பகுதியை பூமியின் வளிமண்டலத்தில் உள்ள மேகங்களும் வளிமண்டலத் துகள்களும் மீண்டும் விண்வெளியை நோக்கிப் பிரதிபலிக்கின்றன. மீதமுள்ள கதிர்வீச்சு பூமியின் மேற்பரப்பை வந்தடைகிறது. அவற்றில் ஒரு பகுதியை நிலப்பரப்பும் கடல்களும் உள்வாங்கி வெப்ப ஆற்றலாகச் சேமித்துக் கொள்கிறது.

## பசுமைக்குடில் வாயுக்களின் செயல்பாடு

பூமி உள்வாங்கிய சூரிய ஆற்றலை அகச்சிவப்பு(Infrared) வெப்பக் கதிர்வீச்சாக மீண்டும் விண்வெளியை நோக்கி வெளியிடுகிறது. அந்த வெப்பக் கதிர்வீச்சின் ஒரு பகுதியை வளிமண்டலத்தில் உள்ள கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற பசுமைக்குடில் வாயுக்கள்(Greenhouse Gases) அந்த வெப்பத்தைத் தடுத்து, மீண்டும் பூமியை நோக்கியே திருப்பி அனுப்புகின்றன.

'இந்த வாயுக்கள் இல்லையென்றால் நன்றாக இருக்குமே' என்று நமக்குத் தோன்றலாம். ஆனால் உண்மையில் இந்த வாயுக்கள் இல்லை என்றால் பூமியின் சராசரி வெப்பநிலை -18°C ஆகக் குறைந்து பூமி முழுமையாக உறைந்து போய்விடும். இதனால் தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்கள் வாழ இயலாது.





எனவே பூமியை வாழத் தகுந்த குறிப்பிட்ட வெப்ப நிலையில் வைத்திருக்க இந்த வாயுக்கள் மிகவும் அவசியமானவை. இந்த பசுமைக்குடில் வாயுக்களின் செயல்பாட்டினால்தான் பூமியின் வெப்பநிலை இயல்பைவிட சுமார் 33°C உயர்ந்து உயிரினங்கள் வாழ ஏற்ற சூழல் நிலவுகிறது.

விஞ்ஞானிகள் தொடர்ந்து எச்சரிப்பது போல நமது பூமி தன் இயல்பான வெப்ப நிலையை இழந்து தொடர்ந்து வெப்பமடைந்து வருகிறது(Global Warming). இதன் நேரடி விளைவாக துருவப் பகுதியில் உள்ள பனிப்பாறைகள் மிக வேகமாக உருகத் தொடங்கியுள்ளன. புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் பல மாநாடுகளைக் கூட்டி பல்வேறு யுக்திகளையும் திட்டங்களையும் கையாண்டு பார்த்தாலும்

இன்னமும் எதிர்பார்த்த முழுமையான பலன் கிடைக்கவில்லை என்பதே கசப்பான உண்மை. பூமியின் இயற்கையான சராசரி வெப்பநிலை சுமார் 14-15°C ஆகும். ஆனால் மனிதர்களின் செயல்பாடுகளால் இந்த சம நிலை குலைந்துவிட்டது.

தொழில்புரட்சிக்கு முன்பு தோராயமாக 14°C ஆக இருந்த பூமியின் சராசரி வெப்ப நிலை இன்று சுமார் 15.1°C ஐ எட்டியுள்ளது.




இதே நிலை நீடித்தால், எதிர்காலத்தில் இது இன்னும் மோசமடைந்து 2°C முதல் 4°C அல்லது அதற்கும் மேல் உயரக்கூடும் என்று IPCCயின் பல காலநிலை மாதிரிகள் எச்சரிக் கின்றன. வெறும் 1°C வெப்பநிலை உயர்வு இந்த கிரகத்தின் காலநிலையைத் தலைகீழாக மாற்றியமைத்துள்ளது.

## நகரங்களால் உயரும் வெப்பம்

பாலைவனப் பகுதிகளில் பகல் நேரத்தில் கடும் வெப்பம் நிலவினாலும் இரவு நேரத்தில் நல்ல குளிர்ச்சியை உணர முடியும். ஏனெனில் மணல் தன் மீது விழும் சூரியக் கதிர்வீச்சை உடனுக்குடன் பிரதிபலித்துவிடுமே தவிர அதிக வெப்பத்தைத் தனக்குள்ளேயே தக்க வைத்துக் கொள்வதில்லை. இதனால் அங்கு இரவில் வெப்பம் இருப்பதில்லை.

ஆனால் நவீன வசதிகள் நிறைந்த நகரங் களோ தார்ச் சாலைகளையும் சிமெண்ட் கட்டிடங்களையும் அதிக அளவில் கொண் டுள்ளன. இவை பகல் முழுவதும் சூரிய வெப்பத்தைச் சேமித்து வைத்துக்கொண்டு இரவு நேரங்களில் மெதுவாகப் புறவெளியில் வெளியிடுகின்றன. எனவே சூரியன் மறை வுக்குப் பிறகும் இவை வெளிப்புற வெப் பத்தை அதிகப்படுத்துகின்றன. அதே சமயம் நவீனமயமாக்கலின் அங்கமாக விளங்கும் தொழிற்சாலைகள், அவற்றிலிருந்து வெளி யாகும் நச்சு வாயுக்கள் பூமியின் வெப்ப நிலையை உயர்த்துகின்றன.

நாம் வீடுகள்தோறும் பயன்படுத்தும் குளிர்சாதனப் பெட்டிகள்(AC), குளிர்பதனப் பெட்டி (Refrigerator) ஆகியவையும் வெளிப் புற சூழலை சூடாக்குகின்றன. அப்படியா னால் சாலைகளே இல்லாத கடலின் நடுப் பகுதியிலும், கான்கிரீட் நகரங்களே இல்லாத அண்டார்டிகா, ஆர்க்டிக் பகுதியிலும் வெப்ப நிலை ஏன் உயர்கிறது? என்ற கேள்வியை நீங்கள் எழுப்பலாம்.

இதற்கு விடை கடல்களில்தான் உள்ளது. உலக வெப்பமயமாதலால் உருவாகும் கூடுதல் வெப்பத்தின் பெரும்பகுதியை கடல்களே உள்வாங்குகின்றன. கடல் நீர் வெப்பத்தை அதிக அளவில் உள்வாங்கிச் சேமித்து வைக்கும் இயல்புடையது. பூமியின் மேற்பரப்பில் சுமார் 71% பகுதியை கடல்கள் மூடியுள்ளன. பசிபிக் பெருங்கடலின் மேற் பரப்பு வெறும் 1°C உயர்ந்தால் கூட அதன் பரப்பளவு மிகப் பெரியது என்பதால் அதில் சேமிக்கப்படும் வெப்ப ஆற்றலின் அளவு மனித கற்பனைக்கு எட்டாததாக இருக்கும். சேமிக்கப்பட்ட வெப்பத்தின் ஒரு பகுதி பின்னர் வளிமண்டலத்திற்குப் பரவி உலகின் காலநிலை அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

இந்த உலக வெப்பநிலையின் மாற்றங் களை விஞ்ஞானிகள் மிக உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள். இதற்காக அவர்கள்:

விண்வெளியில் உள்ள செயற்கைக் கோள்கள் (Satellites) வழங்கும் அதிநவீன தரவுகள், வளிமண்டலக் காற்றின் அழுத்தம் (Atmospheric Pressure), ஈரப்பதம்(Humidity) போன்ற பல்வேறு காரணிகளைத் தொகுத்து பூமி எவ்வளவு வெப்பமடைந்து வருகிறது என்பதைத் கணிக்கிறார்கள்.

அவற்றில் பசிபிக் பெருங்கடலில் உருவாகும் எல் நினோ(El Nino), லா நினா(La Nina) ஆகியவை மிகவும் முக்கியமான காலநிலை நிகழ்வுகளாகக் கருதப்படுகின்றன. அண்மைக் காலமாக இது குறித்து ஊடகங்களில் பரவலாக விவாதிக்கப்பட்டு வருகின்றது.

## 'எல் நினோ' என்றால் என்ன?

நூற்றாண்டுகளுக்கு முன்பே பெரு(Peru), ஈக்வடார் நாடுகளின் மீனவர்கள் ஒரு விசித்திரமான நிகழ்வைக் கவனித்தனர். கிறிஸ்துமஸ் காலகட்டத்தில் கடல் நீர் வழக்கத்தை விட அதிகமாகச் சூடாகிவிடும். இதனால் மீன்கள் குறைந்துவிடும், மீன்பிடி தொழில் பாதிக்கப்படும். கிறிஸ்துமஸ் காலத்தில் தோன்றியதால் அந்த வெப்ப நீரோட்டத்திற்கு அவர்கள் 'எல் நினோ' என்று பெயரிட்டனர். ஸ்பானிய மொழியில் El Nino என்றால் 'கிறிஸ்து குழந்தை' அல்லது 'ஆண் குழந்தை' என்று பொருள்.

இதன் எதிர்மறை நிலை லா நினா (La Nina) ஆகும். அதாவது பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வழக்கத்தை விட குளிர்ச்சியாக மாறும் நிலை. அன்று ஏதோ ஒரு குறிப்பிட்ட கடற்கரையில் நடக்கும் சாதாரண நிகழ்வு என்று நினைத்த இது, பிற்காலத்தில் உலகின் மிக முக்கியமான காலநிலை காட்டியாக(Climate indicator) மாறும் என்று அப்போது எவரும் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்.

எல் நினோ உருவாகும்போது பசிபிக் பெருங்கடலில் சேமிக்கப்பட்ட வெப்பத்தின் ஒரு பகுதி வளிமண்டலத்திற்கு அதிகமாகப் பரவுகிறது. இதனால் சில நாடுகளில் அதிக மழையும், சில நாடுகளில் கடுமையான வறட்சியும் ஏற்படும். சில இடங்களில் வெப்ப அலைகள்(Heat waves) உருவாகும்; பருவ மழையின் போக்கு மாறும்; உலகின் சராசரி வெப்பநிலையில் தற்காலிக உயர்வு ஏற்படும்.

## இந்தியாவிற்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை

தற்போது பசிபிக் பெருங்கடலின் வெப்ப மண்டலப் பகுதியில் 'எல் நினோ' விளைவு தொடங்கியுள்ளதாக அமெரிக்காவின் தேசிய பெருங்கடல், வளிமண்டல நிர்வாகம் (National Oceanic and Atmospheric Administration) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதனால் கடல் மேற்பரப்பின் வெப்பநிலை இயல்பை விட 2°C வரை அதிகரிக்க 63% வாய்ப்புகள் உள்ளன. இது மிகக் கடுமையான எல் நினோ பாதிப்பைக் குறிக்கிறது. இது ஒரு சூப்பர் எல் நினோ(Super El Nino) ஆக உருவெடுக்கக்கூடும் என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் (India Meteorological Department) கணிப்பின் படி இந்த ஆண்டின் தென்மேற்கு பருவமழை இயல்பைவிடக் குறைவாக இருக்கும் என முன்னரே எச்சரிக்கப்பட்டது. அந்தக் கணிப்பைப் போலவே ஜூன் மாதத்தில் நாட்டின் பல பகுதிகளில் மழைப்பொழிவு இயல்பை விட மிகவும் குறைவாகப் பதிவானது.

இதன் விளைவாக மண்ணின் ஈரப்பதம் குறைந்தது. விதைகள் முளைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டன. பல பகுதிகளில் விவசாயிகள் விதைப்புப் பணிகளைத் தற்காலிகமாக ஒத்திவைத்தனர்.

எல் நினோவின் தாக்கம் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியாக இல்லை. இருப்பினும் மழையை நம்பியுள்ள விவசாயிகள் அதன் தாக்கத்தை முதலில் உணரத் தொடங்கினர். குறிப்பாக தென்மேற்கு பருவமழை பலவீனமடைந்ததால் காரீஃப்(Kharif) பருவ சாகுபடி (ஜூன்-அக்டோபர்) பல மாநிலங்களில் பாதிக்கப்பட்டது.

அதிக பாதிப்புக்குள்ளாகும் பயிர்களில் நெல், மக்காச்சோளம், பருத்தி, சோயாபீன், துவரம் பருப்பு, உளுந்து, நிலக்கடலை, எண்ணெய் வித்துப் பயிர்கள் முக்கிய இடத்தைப்

பெறுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை பருவமழையை அதிகமாக சார்ந்துள்ளதால் மழை பற்றாக்குறை நேரடியாக மகசூலைப் பாதிக்கும் அபாயம் உள்ளது. இந்த நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த இந்திய அரசு உடனடியாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அவற்றில் முக்கியமானவை: சுமார் 150 முதல் 200 மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டன. இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றம்(ICAR), மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள், மாநில வேளாண்மைத் துறைகளுக்கு மாவட்ட வாரியான அவசரகால வேளாண் திட்டங்களைப் புதுப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. வறட்சியைத் தாங்கும் பயிர் ரகங்கள், மாற்றுப் பயிர்கள், நீர் மேலாண்மை தொடர்பான ஆலோசனைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இதற்கிடையில் மத்திய நீர்வள ஆணையத்தின்(CWC) அறிக்கையொன்று நாட்டின் முக்கிய அணைகளில் சேமிக்கப்பட்டிருந்த நீரின் அளவு வேகமாகக் குறைந்து வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ளது. இதன் விளைவாக பாசன வசதிகள் குறையலாம். ராபி(Rabi) பருவ (அக்டோபர்-ஏப்ரல்) சாகுபடியும் பாதிக்கப்படலாம். குடிநீர், வேளாண் நீர் மேலாண்மைக்குக் கூடுதல் சவால்கள் உருவாகலாம்.

இருப்பினும் விஞ்ஞானிகள் ஒரு முக்கியமான நம்பிக்கையையும் தெரிவிக்கின்றனர். இன்று இந்தியா வறட்சியைத் தாங்கும் புதிய பயிர் ரகங்கள், மேம்பட்ட பாசன வசதிகள், அறிவியல் சார்ந்த வேளாண் தொழில்நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்தி வருவதால் கடந்த காலத்தை விட எல்நினோவின் தாக்கத்தை சமாளிக்கும் திறன் அதிகரித்துள்ளது.

ஆனால் பருவமழை தொடர்ந்து பலவீனமாக இருந்தால், கடுமையான விவசாய இழப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளது. இருப்பினும் கடந்த காலங்களில் ஏற்பட்டதைப் போன்ற உணவுப் பற்றாக்குறையும் கடுமையான நெருக்கடியும் மீண்டும் உருவாகாது என்றே நம்புவோம்.


# HIJAZ
## LEATHERS PVT. LTD.,

**Tanners & Exporters of**
**Finished Leathers & Fashion Gloves**

**HEAD OFFICE :**
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

**TANNERY :**
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

**GLOVE FACTORY :**
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

# இஸ்லாமிய எதிர்ப்பிலிருந்து
# இறையச்சத்தை நோக்கி..!

## - யோரான் வான் கிளாவரென்

**தமிழில் : E. ஹுசைனுல் ஆபிதீன்** M.Com.,



நெதர்லாந்து நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தீவிர இஸ்லாமிய எதிர்ப்பு அரசியல்வாதியாக இருந்து பின்னர் இஸ்லாத்தின் மீதான ஈர்ப்பால் இஸ்லாத்தைத் தழுவிய **யோரான் வான் கிளாவரென்** (Joram van Klaveren) அவர்களின் ஒரு நெகிழ்ச்சியான நேர்காணல்

- **உங்களைப் பற்றி சுருக்கமான அறிமுகம் செய்யுங்களேன்.**

1979ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் தேதி ஆம்ஸ்டர்டாம் நகரில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தேன். தந்தை, தாய், தம்பி, தங்கை, ஒரு பூனை என எனது இல்லம் அமைந்திருந்தது. ஆம்ஸ்டர்டாமில் வளர்ந்த நான் தீவிரமாக மார்க்கத்தைப் பின்பற்றும் புரோட்டஸ்டன்ட் (Protestant) கிறித்தவக் குடும்பத்தைச் சேர்ந்தவன். உயர்நிலைப் பள்ளியை முடித்த பிறகு ஒப்பிட்டுச் சமயவியலைப்(Comparative Religion) பயின்றேன். சில ஆண்டுகள் ஆசிரியராகவும் பணியாற்றினேன். அதன் பிறகு நெதர்லாந்து அரசியலில் நுழைந்து, சுதந்திரக் கட்சி(Freedom Party) சார்பில் தீவிரமாகச் செயல்பட்டேன். நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

இறுதியில் இஸ்லாத்திற்கு எதிராக ஒரு புத்தகத்தை எழுதத் தீர்மானித்தேன். ஆனால் இஸ்லாத்தை எதிர்க்கத் தொடங்கிய அந்த முயற்சி, மெல்ல மெல்ல இறைவனைத் தேடும் ஒரு பயணமாக மாறி இறுதியில் நான் ஒரு முஸ்லிமாக மாற வழிவகுத்தது.

- **இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பு உங்களது ஆன்மிக வாழ்க்கை எவ்வாறு இருந்தது? நீங்கள் எதனை நம்பினீர்கள்?**

நான் முஸ்லிமாவதற்கு முன்பு, ரீஃபார்ம்டு சர்ச் (Reformed Church) எனப்படும் சீர்திருத்தக் கிறித்தவப் பிரிவைச் சார்ந்தவனாக இருந்தேன். நாங்கள் தினமும் பைபிளை வாசிப்போம். எங்களது குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் விவிலியப் பெயர்களே (Biblical Names) சூட்டப்பட்டன. நாங்கள் அனைவரும் திருமுழுக்கு(Baptism) பெற்று முறையாக தேவாலயத்திற்குச் செல்பவர்களாக இருந்தோம். அந்த வகையில் நாங்கள் ஒரு முழுமையான கிறித்தவக் குடும்பமாகவே வாழ்ந்தோம்.

நிச்சயமாக அகிலத்தைப் படைத்த ஒரு படைப்பாளன் இருக்கிறான் என்பதை நான் உறுதியாக நம்பினேன். சொர்க்கம், நரகம், மலக்குகள் (வானவர்கள்), இறைச்செய்திகள் (வஹீ) ஆகியவற்றின் மீது எனக்கு நம்பிக்கை இருந்தது. நிச்சயமாக கிறித்தவர்களையும் முஸ்லிம்களையும் பிரிக்கும் அந்த முக்கியப் புள்ளியான ஈஸா(அலை) (இயேசு) அவர்களை இறைவனின் குமாரன் என்று நான் நம்பினேன். தத்துவ ரீதியாகச் சொல்லப் போனால் இயேசுவே இறைவன் என்றும் நான் நம்பி வந்தேன். அத்தோடு கிறித்துவின் சிலுவை மரணம், பாவப் பரிகாரம் (Atonement) ஆகியவற்றின் மீதும் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

இருப்பினும் திரித்துவம்(Trinity - பிதா, சுதன், பரிசுத்த ஆவி) என்பது மிகவும் சிக்கலான ஒரு கருத்தாகும். நீங்கள் அதனை நம்பினாலும் நம்பாவிட்டாலும், அதன் பின்னணியில் உள்ள தர்க்கம் மிகவும் சிக்கலானது. ஏனெனில் பைபிளின் படி இறைவன்

நித்தியமானவன்(Eternal); அவனுக்கு மரண மில்லை. ஆனால் அதே சமயம் இயேசு கிறிஸ்து இறந்துவிட்டார் என்று சொல்லும் போது, ஒரே நேரத்தில் ஒருவன் நித்திய மானவனாகவும், மரணமடையக் கூடிய வனாகவும் இருக்க முடியாது என்ற குழப்பம் எனக்குள் எழுந்தது.

எனக்கு 16 அல்லது 17 வயதாக இருந்த போது இத்தகைய கேள்விகளை நான் கேட்கத் தொடங்கினேன். இதில் தர்க்க ரீதியாக ஏதோ தவறு இருப்பதை நான் உணர்ந்தேன். இது குறித்து பல பாதிரியார்கள், போதகர்கள், யூத ரபிக்களிடம் கூட நான் விவாதித்தேன். ஆனால் அவர்கள் அளித்த பதில்கள் எனக்கு மன நிறைவைத் தரவில்லை. இது எனக்குள் பெரும் ஐயங்களை ஏற்படுத்தியது. இருப் பினும் ஒருவேளை இதைப் புரிந்து கொள் ளும் அளவிற்கு எனக்கு புத்திசாலித்தனம் இல்லையோ என்னவோ என்று எண்ணி அந்த ஐயங்களை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்தேன். நான் தொடர்ந்து இறைவனை நம்பினேன். இயேசுவை ஒரு முக்கியமான ஆளுமையாகக் கருதினேன். ஆனால் அதன் ஆழமான நுணுக்கங்களை அப்படியே விட்டு விட்டேன்.

- **இஸ்லாத்திற்கு எதிராக ஒரு புத்தகத்தை எழுத வேண்டும் என்று நீங்கள் ஏன் முடிவு செய்தீர்கள்? அதற்கான காரணம் என்ன?**

உயர்நிலைப் பள்ளிக்குப் பிறகு நான் பல்கலைக்கழகத்தில் ஒப்பிட்டுச் சமயவிய லைப் பயின்றேன். ஒரு வியக்கத்தக்க தற் செயல் நிகழ்வு என்னவென்றால் நான் கல்லூரியில் சேர்ந்த முதல் நாள் 2001 செப்டம்பர் 11, (9/11 தாக்குதல் நடந்த நாள்) ஆகும். அன்று நான் மனதிற்குள், 'இந்த முஸ்லிம்கள் பைத்தியக்காரர்கள்; இந்த மார்க்கம் ஒருபோதும் உண்மையாக இருக்க முடியாது' என்று எண்ணிக் கொண்டேன்.

அதன்பிறகு சில ஆண்டுகள் கழித்து நெதர்லாந்தில் தியோ வான் கோ(Theo Van Gogh) எனும் புகழ்பெற்ற திரைப்படக் கலைஞர் தெருவில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடல் சிதைக்கப்பட்டு, வயிற்றில் ஒரு கத்தி சொருகப்பட்டிருந்தது. அந்தக் கத்தியில் அயான் ஹிர்சி அலீ எனும் பெண்ணுக்கு ஒரு மிரட்டல் கடிதம் இருந்தது. அதில் அடுத்தது நீதான் என்று எழுதப்பட்டிருந்தது. இந்த நிகழ்வுகள் எனக்குள் இருந்த இஸ்லாமிய எதிர்ப்புக் கொள்கையை மிகவும் பலப்படுத்தியது. நமது நாட்டிற்குத் தீங்கு விளைவிக்கும் இந்தத் தீமையைத் தடுத்து நிறுத்த நான் அரசியலில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று தீர்மானித்தேன்.

இஸ்லாத்தின் மீதான வெறுப்பின் காரண மாகவே நான் அரசியலுக்கு வந்தேன். உலகம் முழுவதும் இஸ்லாம் ஏன் ஆபத்தானது என்பதை மக்களுக்கு விளக்கவே நான் அந்தப் புத்தகத்தை எழுதத் தொடங்கினேன். ஆனால் நான் அந்தப் புத்தகத்தை எழுதிக் கொண்டிருந்த போது எனக்குள் முன்பு இருந்த அந்த பழைய கிறித்தவக் கேள்விகளும் ஐயங் களும் மீண்டும் எழுந்தன.

நான் ஒரு தீவிர இறைநம்பிக்கையாளராக இருந்ததால் உண்மையை அறிவதில் உறுதி யாக இருந்தேன். வியப்பு என்னவென்றால், கிறித்தவ மதத்தில் எனக்குப் பல ஆண்டு களாக விடை தெரியாமல் இருந்த அத்தனை ஐயங்களுக்கும் இஸ்லாமியப் போதனைகள் மிகத் தெளிவான பதில்களை வழங்கின. இஸ்லாத்தை அழிக்கத் தொடங்கிய எனது பேனா இறுதியில் இஸ்லாமே சத்தியம் என்பதை எனக்கு உணர்த்தியது.

நான் இந்தப் புத்தகத்தை எழுதத் தொடங் கியபோது மக்கள் இது ஓர் அரசியல் சார்ந்த புத்தகம் என்று தான் எண்ணினார்கள். ஆனால் உண்மையில் இது முழுக்க முழுக்க ஒரு மார்க்கம் (மதம்) சார்ந்த புத்தகமாகும். ஏனெனில் இஸ்லாம் ஒரு மார்க்கமாக உல கிற்கு எப்படிப்பட்ட ஆபத்தை விளைவிக் கிறது என்பதை கிறித்தவக் கோணத்தில் மக்க ளுக்கு விளக்கவே நான் விரும்பினேன்.

தொடக்கத்தில் கிறித்தவக் கடவுள் கொள் கையையும், இஸ்லாமியக் கடவுள் கொள் கையையும் ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்

கினேன். எனக்கு திரித்துவக் கொள்கை (பிதா, சுதன், பரிசுத்த ஆவி) மீது ஏற்கனவே சில ஐயங்கள் இருந்தன. ஆனால் இஸ்லாம் போதிக்கும் தவ்ஹீத் எனப்படும் இறைவனின் ஒருமைப்பாட்டுக் கொள்கையானது மிகுந்த தர்க்க ரீதியாகவும்(Logical) அறிவுப்பூர்வ மாகவும் இருப்பதை நான் கண்டேன்.

எதனால் இஸ்லாத்தின் தவ்ஹீத் கொள்கை கிறித்தவத்தில் இல்லை என்பதைத் துல்லியமாக அறிய நான் மீண்டும் பைபிளை ஆழமாகப் பயிலத் தொடங்கினேன். பழைய ஏற்பாட்டில்(Old Testament) முந்தைய தீர்க்க தரிசிகள் அனைவரும் இறைவன் ஒருவனே, இறைவன் ஒருவனே என்றே திரும்பத் திரும் பக் கூறியுள்ளனர்.

பிறகு புதிய ஏற்பாட்டில்(New Testament) இயேசு கிறிஸ்து (ஈஸா(அலை) அவர்கள் கூறிய வார்த்தைகளை மட்டும் உற்று நோக் கினேன். அதில் ஒரு சம்பவம் இடம்பெற் றுள்ளது: ஒரு மனிதன் இயேசுவிடம் வந்து, 'வாழ்வின் மிக முக்கியமான கட்டளை எது? நான் எப்படி சொர்க்கத்தைப் பெற முடியும்?' என்று கேட்கிறான். அதற்கு இயேசு 'இஸ்ர வேலர்களே! கேளுங்கள்! உங்களது இறைவன் ஒருவனே; உன்னை நீ நேசிப்ப தைப் போலவே உனது பிற சகோதரனையும் நேசி!' என்று பதிலளிக்கிறார்.

இதைக் கண்ட போது நான் வியந்து போனேன். இயேசுவே இறைவன் ஒருவன் என்று சொல்லும் போது, இஸ்லாமியக் கடவுள் கொள்கைதான் பைபிளுக்கு மிக நெருக்கமாக இருப்பதை நான் உணர்ந்தேன். கிறித்தவம் எனும் மதம் வேறொன்றைப் போதித்தாலும், பைபிள் சொல்லும் கடவுள் கொள்கை அதுவல்ல என்பதை வாரக் கணக் கிலான எனது ஆய்வுகளுக்குப் பிறகு நான் முடிவெடுத்தேன்.

**எனது உள்ளம் மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது. இஸ்லாத்தை ஒழிக்கப் புறப்பட்ட எனது பேனா இப்போது இஸ்லாத்தின் உண்மைகளை எழுதத் தொடங்கியது. இந்த மாற்றம் மிகவும் விசித்திரமாகவும், அதே சமயம் மன அமைதியளிப்பதாகவும் இருந்தது.**

எனது தேடலின் போது ஏற்பட்ட குழப் பங்களுக்கு விடை தேடி, இஸ்லாமிய அறிஞர்கள் சிலருக்கு நான் கடிதம் எழுதி னேன். அவர்களில் ஒருவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியரான ஷெய்க் அப்துல் ஹக்கீம் முராத் அவர்கள். நான் ஓர் இஸ்லாமிய எதிர்ப்பு அரசியல்வாதியாக இருந்த போதிலும், அவர்களிடம் எனது ஐயங் களை மிகவும் வெளிப்படையாகக் கேட்டேன். 'இஸ்லாம் ஏன் பயங்கரவாதத்தைத் தூண்டு கிறது? ஏன் பெண்களுக்கு எதிரானது? ஏன் கிறித்தவர்களுக்கு எதிரானது?' எனப் பல கேள்விகளை அடுக்கியிருந்தேன். சுமார் ஆறு வாரங்களுக்குப் பிறகு அவர் எனக்கு மிகவும் விரிவான ஒரு மின்னஞ்சலை அனுப்பினார்.

அவர் எனது அத்தனை ஐயங்களுக்கும் நேரிடையாகப் பதிலளித்ததோடு மட்டுமல் லாமல், நான் வாசிக்க வேண்டிய பல புத்தகங் களையும், கட்டுரைகளையும் பரிந்துரைத்தார். அந்தப் பேராசிரியரின் அறிவுப்பூர்வமான அணுகுமுறை எனது பார்வையை மாற்றத் தொடங்கியது. அவர் பரிந்துரைத்த புத்தகங் களைப் படித்த பிறகு, பழைய ஏற்பாட்டில் வரும் தீர்க்கதரிசிகளையும், முஹம்மது நபி (ஸல்) அவர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். 'அவர்கள் அனைவரும் தீர்க்கதரிசிகள் என்றால், முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மட்டும் ஏன் இருக்கக்கூடாது?' என்ற கேள்விக்கு என்னிடம் எவ்வித எதிர்வாதமும் எஞ்சியிருக்கவில்லை.

முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்குப் பல மனைவிகள் இருந்ததை நான் ஒரு குறையாகக் கருதினேன். ஆனால் வரலாற்றை திருப்பிப் பார்த்த போது தாவூத்(அலை), சுலைமான்(அலை), இப்ராஹீம்(அலை) ஆகியோருக்கும் பல மனைவிகள் இருந்ததை அறிந்தேன். மேலும் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா என உலக கலாச்சார வரலாற்றில் இது ஒரு பொதுவான நடைமுறையாகவே இருந்திருக்கிறது. எனவே இது ஒருவரை தீர்க்கதரிசி இல்லை என்று சொல்வதற்கு ஆதாரமாகாது என்பதை உணர்ந்தேன்.

தொடக்கத்தில் முஹம்மது நபி(ஸல்) அவர்களை வரலாற்றிலேயே மிகவும் தீயவர் என்று நான் கருதினேன். பிறகு இல்லை அவர்கள் அத்தகைய தீயவர் அல்ல, ஆனால் அவர்கள் ஒரு தீர்க்கதரிசியும் அல்ல என்று நினைத்தேன். இறுதியாக அவர்கள் உண்மையிலேயே ஒரு தீர்க்கதரிசியாக இருக்கக் கூடுமோ? என்று ஐயம் கொண்டேன்.

எனது உள்ளம் மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது. இஸ்லாத்தை ஒழிக்கப் புறப்பட்ட எனது பேனா இப்போது இஸ்லாத்தின் உண்மைகளை எழுதத் தொடங்கியது. இந்த மாற்றம் மிகவும் விசித்திரமாகவும், அதே சமயம் மன அமைதியளிப்பதாகவும் இருந்தது.

பேராசிரியர் அப்துல் ஹக்கீம் முராத் அவர்கள் எனக்கு ஒரு மிகச் சிறந்த ஆலோசனையை வழங்கினார். அவர் கூறினார்: 'யோரம்! நீங்கள் இதுவரை இஸ்லாத்திற்கு எதிராக வாசித்த அத்தனை புத்தகங்களும் முஸ்லிம் அல்லாதவர்களால் எழுதப்பட்டவை. நீங்கள் கிறித்தவத்தைப் பற்றி ஆழமாக அறிய விரும்பினால் இறைமறுப்பாளர்களின்(Atheists) புத்தகங்களையா வாசிப்பீர்கள்? இல்லை கிறித்தவ அறிஞர்களின் புத்தகங்களைத்தான் வாசிப்பீர்கள். அதேபோலத்தான் இஸ்லாத்தையும் நீங்கள் அணுக வேண்டும் என்றால் இஸ்லாத்தைப் பற்றி அறிய இஸ்லாமிய அறிஞர்களின் புத்தகங்களை வாசியுங்கள்' என்றார்.

அவரது ஆலோசனையின்படி, ஒரே தலைப்பில் ஒரு முஸ்லிம் எழுதிய புத்தகத்தையும், ஒரு முஸ்லிமல்லாதவர் எழுதிய புத்தகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். அப்போதுதான் எனக்குப் புரிந்தது; முஸ்லிமல்லாத எழுத்தாளர்கள் பல இடங்களில் தவறான புரிதலாலோ அல்லது திட்டமிட்டோ வார்த்தைகளைத் தவறாக மொழி பெயர்த்தும், சில தகவல்களைத் தவிர்த்தும், சிலவற்றைத் தங்களது விருப்பப்படியும் சேர்த்துள்ளார்கள். இதனால் இஸ்லாம் எனும் உண்மையான மார்க்கத்திற்குப் பதிலாக முற்றிலும் வேறொரு சித்திரத்தை அவர்கள் உருவாக்கியிருந்ததை நான் உணர்ந்தேன்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றி மார்ட்டின் லிங்க்ஸ்(Martin Lings) எழுதிய புத்தகத்தை நான் வாசித்தேன். ஒரு மேலைநாட்டவரால் எழுதப்பட்ட அந்தப் புத்தகம் எனது சிந்தனைத் தளத்திற்கு மிகவும் நெருக்கமானதாக இருந்தது. அதுவரை எனது மனதில் முஹம்மது(ஸல்) அவர்கள் ஒரு போர் வெறியராக (Warlord) மட்டுமே சித்திரிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அந்தப் புத்தகத்தை வாசித்த பிறகுதான் அவர்களை ஒரு பாசமுள்ள தந்தையாக, ஒரு சிறந்த தோழராக, ஓர் உன்னதமான ஆசிரியராக நான் கண்டேன். அவர்களது நற்பண்புகளை நான் ஆழமாக உணர்ந்த போது, இவர்கள் ஒரு சிறந்த மனிதர் அல்ல என்று சொல்ல என்னால் முடியவே இல்லை. அவர்களது புனிதமான குணம் என்னை இன்னும் அதிகமாக வாசிக்கத் தூண்டியது.

எனது ஆய்வின் போது என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்திய விஷயம் எதுவென்றால், ஹிந்த்(ரலி) தொடர்பான சம்பவமாகும். ஹிந்த்(ரலி) அவர்கள் அண்ணலாரின் பரம எதிரியான அபூ சுஃப்யான்(ரலி) அவர்களின் மனைவியாக இருந்தவர். உஹுது போர்க்களத்தில் அண்ணலாரின் அன்புக்குரிய சிறிய தந்தை ஹம்ஸா(ரலி) அவர்களைக் கொல்வதற்காகப் பணம் கொடுத்தவர் இவரே.

போர்க்களத்தில் ஹம்ஸா(ரலி) அவர்கள் வீரமரணமடைந்த பிறகு, அவர்களது மூக்கையும் காதுகளையும் சிதைத்து மிகவும் கொடூரமாக ஹிந்த்(ரலி) நடந்துகொண்டார். இந்த நிகழ்வு அண்ணலார்(ஸல்) அவர்களை பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. பல ஆண்டுகளுக்குப் பிறகு, நபி(ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொண்டு பெரும் அதிகாரத்துடன் திரும்பிய போது அங்கே ஹிந்த்(ரலி) இருந்தார்.

நான் அந்தப் புத்தகத்தை வாசித்த போது, 'நிச்சயமாக இப்போது ஹிந்த் சிலுவையில் அறையப்படுவார் அல்லது அவர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்' என்றுதான் எதிர்பார்த்தேன். ஆனால் அண்ணலார்(ஸல்) அவர்கள்

என்ன கூறினார்கள் தெரியுமா? ‘நிச்சயமாக அனைவரும் மன்னிக்கப் பட்டீர்கள்! நீங்கள் இங்கே முஸ்லிம்களுடன் இணைந்து வாழ விரும்பினால் வாழலாம், இல்லையென்றால் நீங்கள் செல்லலாம்; இனி இரத்தம் சிந்துவதற்கு இங்கு இடமில்லை’ என்றார்கள்.

தனது உயிருக்கு நிகரான உறவினரைக் கொன்றவரை, அவர்களது சடலத்தை இழிவுபடுத்தியவரை இவ்வளவு பெருந்தன்மையுடன் ஒருவரால் மன்னிக்க முடியும் என்றால், அவர்கள் எத்தகைய உயர்ந்த குணம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்! இத்தகைய உயரிய பண்பு ஒரு சாதாரண மனிதரிடம் காண முடியாது.

இந்தச் சம்பவத்தை உணர்ந்தபோது நிச்சயமாக இவர்கள் ஒரு தீர்க்கதரிசிதான்(நபி) என்ற முடிவிற்கு நான் வந்தேன். ஆனால் அந்த நிமிடம் எனக்குள் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. இது ஆபத்தானது. நான் ஏற்கனவே இறைவன் ஒருவன் என்பதை ஏற்றுக்கொண்டேன்; இப்போது முஹம்மது(ஸல்) அவர்களைத் தீர்க்கதரிசி என்றும் ஏற்றுக்கொண்டால், அது ஷஹாதா (கலிமா) ஆகிவிடுமே! என்று அஞ்சினேன்.

இஸ்லாத்தை ஒழிக்கப் புறப்பட்ட நான் இப்போது இஸ்லாத்தின் விளிம்பில் நிற்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. வேண்டாம், புத்தகங்களை மூடி வைப்போம்; இது தவறான திசையில் செல்கிறது என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். என்னால் இரண்டு நாள்கள் உறங்க முடியவில்லை. இது ஒரு கனவு போலத் தோன்றினாலும், இதுவே எனது வாழ்வின் நிதர்சனமான உண்மையாக மாறியது.

நான் இஸ்லாத்திற்கு எதிரான கருத்துகளைக் கொண்ட புத்தகங்களை அலமாரியின் மிக உயரமான அடுக்கில் வைத்து மறைக்க முயன்றேன். ஆனால் அடுக்கப்பட்ட புத்தகங்கள் அதிகமாக இருந்ததால் சில புத்தகங்கள் சரிந்து கீழே விழுந்தன. அவ்வாறு கீழே விழுந்த புத்தகங்களில் ஒன்று புனித திருக்குர்ஆன் ஆகும்.

நான் அதனை தரையிலிருந்து எடுத்தபோது எனது கைகள் ஒரு குறிப்பிட்ட பக்கத்தில் இருந்தன. அது திருக்குர்ஆனின் 22ஆவது அத்தியாயத்தின் 46ஆவது வசனமாகும்.

‘உண்மை யாதெனில் கண்கள் குருடாவதில்லை; ஆனால் நெஞ்சங்களிலுள்ள இதயங்கள்தான் குருடாகி விடுகின்றன.’

அந்தத் தருணத்தில் நான் திடுக்கிட்டுப் போனேன். அதுதான் எனது பிரச்னை என்பதை நான் உணர்ந்தேன். ஏனெனில் எனது கண்கள் குருடாக இருக்கவில்லை; எனது பேனா எழுதிய அத்தனை உண்மைகளையும் எனது கண்கள் தெளிவாகப் பார்த்தன. இந்தப் புத்தகத்தை எழுத யாரும் என்னை வற்புறுத்தவில்லை; நானாகவே தேடித் தேடி உண்மைகளை எழுதினேன். ஆனால் அத்தனை ஆதாரங்களை ஆய்ந்த பின்பும், முஹம்மது(ஸல்) அவர்கள் இறைத்தூதர் தான் என்ற உண்மையை ஏற்க எனது நப்ஸ் (ஈகோ அல்லது மனோ இச்சை) தடையாக இருந்தது. எனது கண்கள் பார்த்த உண்மையை ஏற்க எனது உள்ளம் மறுத்துக் கொண்டிருந்தது.

அந்தக் குழப்பமான மனநிலையில் நான் இறைவனிடம் வேண்டினேன்: ‘இறைவா! நீ பைபிள் சொல்லும் கடவுளாக இருந்தாலும் சரி அல்லது குர்ஆன் சொல்லும் அல்லாஹ்வாக இருந்தாலும் சரி; எனக்கு ஓர் அடையாளத்தைத் தா! இதுதான் நேரான வழி என்பதை நான் நூறு விழுக்காடு உறுதியாகத் தெரிந்து கொள்ள எனக்கு ஒரு தெளிவைத் தா!’ என்று வேண்டியபடி உறங்கச் சென்றேன்.

மறுநாள் அதிகாலை என் கண்கள் திறந்தபோது ஒரு மாபெரும் பாதுகாப்பு வளையத்திற்குள் இருப்பதைப் போன்றதொரு பேரமைதி எனக்குள் படர்ந்திருந்தது. எனது வாழ்நாளில் இத்தகைய ஒரு மன அமைதியை நான் அதுவரை உணர்ந்ததே இல்லை. எனக்குள் இருந்த அத்தனை பதற்றங்களும், ஐயங்களும், சூரியனைக் கண்ட பனி போல கரைந்து மறைந்தன. நான் எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன், ‘ஆம், நான் இப்போது ஒரு முஸ்லிமாகி விட்டேன்!’

*(அடுத்த இதழில் முடியும்)*

# சிறிய உதவிகளின் பெரிய பலன்கள்

• அஷ்ஷெய்க்
A.C. அகார் முஹம்மது

நமது வாழ்க்கையில் சில போது மிக நெருக்கடியான ஒரு நிலை தோன்றும்; ஆனால் திடீரென்று, எதிர்பாராத விதமாக அதற்கு ஒரு நிவாரணமும் கிடைத்துவிடும். அவ்வாறு எதிர்பாராத விதமாக ஒரு தீர்வு கிடைப்பதற்கு உங்களுக்காக யாரோ ஒருவர் உளமுருகிச் செய்த ஒரு துஆ காரணமாக இருக்கலாம். அது நீங்கள் உதவி செய்த ஓர் ஏழையின் துஆவாக, நீங்கள் ஆறுதல் அளித்த ஒரு துயரமுற்றவரின் துஆவாக, நீங்கள் நிவாரணம் அளித்த சிரமத்தில் இருந்தவரின் துஆவாக இருக்கலாம்.

எனவே நீங்கள் பிறருக்காகச் செய்கின்ற நற்காரியங்களை, நன்மைகளை, உதவி, உபகாரங்களை அவை சிறியவையாக இருப்பினும் ஒருபோதும் அற்பமானவையாக எண்ண வேண்டாம்; அலட்சியப்படுத்த வேண்டாம்.

நபி(ஸல்) அவர்கள் இது குறித்து பின்வருமாறு கூறினார்கள்: 'நன்மையான எந்தச் செயலையும் சிறியது என்று ஒருபோதும் அலட்சியப்படுத்தாதீர். உமது சகோதரரை மலர்ந்த முகத்துடன் (புன்னகையுடன்) சந்திப்பதும் ஒரு நற்செயலே' (முஸ்லிம்)

மற்றுமொரு நபிமொழியும் இங்கு மேற்கோள் காட்டத்தக்கதாகும்: 'முஸ்லிம் பெண்களே! ஒரு பெண் தனது அண்டை வீட்டாருக்குக் கொடுக்கும் அன்பளிப்பை அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அற்பமாகக் கருத வேண்டாம்; அது ஒரு ஆட்டின் குளம்பாக இருந்தால்கூட! (முஸ்லிம்)

நாம் பிறருக்குச் செய்யும் உதவி எப்படி நமக்குக் கைகொடுக்கும் என்பதைச் சொல்லுகின்ற மற்றும் இரு நபிமொழிகள் கீழ்வருமாறு:

'யார் ஒருவர் இவ்வுலகில் சிரமத்தில் இருப்பவருக்கு இலகுவை ஏற்படுத்துகிறாரோ, அல்லாஹ் அவருக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் இலகுவை ஏற்படுத்துவான்' (ஸஹீஹ் முஸ்லிம் )

'ஓர் அடியான் தனது சகோதரனுக்கு உதவியாக இருக்கும் காலமெல்லாம், அல்லாஹ் அந்த அடியானுக்கு உதவியாக இருப்பான்'(ஸஹீஹ் முஸ்லிம் )

இந்த வகையில் பிறரின் சிரமங்களை நீக்குவதும், அவர்களுக்கு உதவி செய்வதும் மிகப் பெரிய நற்காரியமாகும். ஒருவர் பிறரின் துன்பத்தைப் போக்க முயன்றால், அல்லாஹ் அவருடைய தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பான்; சிரமங்களையும் இலகுவாக்குவான். அவர் இம்மையிலும் மறுமையிலும் தான் செய்யும் நற்கருமங்களின் விளைவுகளையும் பெரும் பேறுகளையும் கண்டு கொள்வார். அவை மிகச் சாதாரணமான, அற்பமான செயல்களாக இருப்பினும் சரியே.

இந்த உண்மையை திருக்குர்ஆன் பின்வருமாறு விளக்குகின்றது: 'எவன் ஓர் அணுவளவு நன்மை செய்தாலும், அதை அவன் நிச்சயமாகக் காண்பான்..'(திருக்குர்ஆன் 99:7)



# சஹாரன்பூர் பள்ளிவாசல் இடிப்பு

# மக்கள் ஆட்சிக்கே களங்கம்

## ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் துணைத்தலைவர் கடும் கண்டனம்

சஹாரன்பூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நூறாண்டுகளுக்கும் மேலாகக் கம்பீரமாக வீற்றிருந்த பள்ளிவாசல் இடிக்கப்பட்டதை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் துணைத் தலைவர் **மலிக் முஅதசிம் கான்** கடுமையாகக் கண்டித்துள்ளார். அந்தக் கொடூர நிகழ்வு மக்களாட்சிக்கே களங்கம் என்று அவர் சாடியிருக்கின்றார். மேலும் நாட்டில் மதச் சுதந்திரம், சொத்துரிமை ஆகியவற்றைக் கேள்விக்குரியதாக்கிய நிகழ்வுதான் அது என்றும் கருத்துரைத்துள்ளார்.

‘முழுக்க முழுக்க அரசியல் அடிமைத் தனத்தையும், சுயநலத்துக்காக அதிகாரத்தைக் குளிர்வித்துப் பிழைக்கின்ற அவலத்தையும் வெளிப்படுத்துகின்ற மன்னிக்க முடியாத நடவடிக்கைதான் இது. இந்த நடவடிக் கையை மேற்கொண்டதன் மூலமாக தங்களின் ஒருதலைப்பட்சமான, குறுகிய மனப்பான் மையுள்ள, வெறி பிடித்த, மதவாத மனோ பாவத்தை ஒட்டுமொத்த உலகத்துக்கும் முன் னால் அம்பலப்படுத்தியதைத் தவிர அந்த சஹாரன்பூர் அதிகாரிகள் சாதித்ததுதான் என்ன?

இந்த ஒட்டுமொத்த நிகழ்வும் இந்திய ஜனநாயகத்துக்கே களங்கத்தை ஏற்படுத்திவிட் டது. நம்முடைய நாட்டில் சிறுபான்மையின ரின் உரிமைகள் எப்படியெல்லாம் பந்தாடப் படுகின்றன என்பதையும், அரசியல் தலைமை அவர்களை நடத்துகின்ற விதத்தையும் அம்பலப்படுத்தி நாட்டின் அரசாட்சி மீது மிகப் பெரும் கறையை ஏற்படுத்தி விட்டது.

நம்முடைய நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள பாதுகாப்பு அரண்களைச் செல்லரிக்கச் செய்வதற்கும், சட்டத்தின் ஆட்சிக்குப் பதிலாக அதிகாரம் படைத்தவர்களின் இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுக்கின்ற நிலைமையின் பக்கம் நாட்டைத் தள்ளுவதற்கும் பெரும் பான்மைவாத அரசியலுக்கு இடம் தந்தால் அது எத்தகைய கேவலமான விளைவுகளுக்கு வித்திடும் என்பதற்கான மிக மிக மோசமான எடுத்துக்காட்டாக சஹாரன்பூர் பள்ளிவாசல் இடிக்கப்பட்ட நிகழ்வு வரலாற்றில் இடம் பெற்று விட்டது’ என்றும் அவர் கூறி உள்ளார்.

கட்டிடங்களை இடிக்கும்போது கடைப் பிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகளாய் உச்ச நீதிமன்றம் வரையறுத்துக் கொடுத்துள்ள தெள்ளத் தெளிவான வழிகாட்டுதல்கள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுவதை சஹாரன்பூர் பள்ளிவாசல் இடிப்பு கேள்விக் குறியாக்கி உள்ளது.

பல பத்தாண்டுகளாக மக்களின் தொடர் பயன்பாட்டில் இருக்கின்ற, பொதுமக்களின் பார்வையில் வெளிப்படையாக இயங்கி வந்த வழிபாட்டுத் தலம் ஒன்றின் அந்தஸ்தை மனம்போன போக்கில் இயங்குகின்ற சில

தலைவர்களாலும், அவர்களின் விருப்பங்களுக்கு எளிதில் வளைந்து கொடுக்கின்ற அதிகாரிகளாலும் தீர்மானித்து விட முடியும் எனில் அரசு நிர்வாகம் மீதும், சட்டத்தின் ஆட்சி மீதுமான நம்முடைய நம்பிக்கையும் அரசியலும் சார்ந்த ஒட்டுமொத்தக் கட்டிடமே நொறுங்கி விழுந்து விடும்.

வக்ஃப், பட்டா, உடைமை, வரையறை தொடர்பான விவகாரங்கள் அனைத்தும் புல்டோசர்களைக் கொண்டு தீர்க்கப்படும் நிலைக்கே அது வித்திடும். நம்முடைய நீதித்துறையே தேவையற்றதாகிவிடும். உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் போன்றவை தாமாக முன்வந்து தலையிட்டு நடவடிக்கை எடுப்பதற்குப் (Suo Moto) போதுமானதாக இந்த நிகழ்வு இல்லையா என்ன?

நம்முடைய அரசியல் அமைப்புச் சட்ட அடிப்படையிலான மக்களாட்சியின் அடித்தளங்களையே அசைத்துப் போடுபவையாய், சட்டத்தின் ஆட்சிக்குப் பதிலாக பெரும்பான்மை பலத்தின் சட்டங்களை நிலைநிறுத்திவிடத் துடிப்பவர்களுக்குத் தைரியத்தையும் ஊக்கத்தையும் தருபவையாய் இருக்கின்ற இந்தக் கொடூரமான நிகழ்வுகளுக்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டும் என்று நீதியை விரும்புகின்ற நாட்டு மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


மலிக் முஅதசிம் கான்

'உத்திரப்பிரதேசத்தின் ஒட்டுமொத்த அரசு நிர்வாக எந்திரத்தின் லட்சணத்தை - அது எப்படியெல்லாம் மாநிலத்தின் உச்ச பட்ச அரசியல் தலைமையின் மறைமுக சமிக்ஞைகளுக்கேற்ப ஆட்டம் போடுகின்றது என்பதையும் சாத்தியமான எல்லா வழிகளிலும் முஸ்லிம் சமுதாயத்தைத் துன்புறுத்துவதிலும் தீராத தொல்லை கொடுப்பதிலும் போட்டி போட்டுக் கொண்டு இயங்குகின்றது என்பதையும் சஹாரன்பூர் பள்ளிவாசல் இடிப்பு நிகழ்வு எடுத்துக்காட்டுகின்றது.

'வரக்கூடிய சட்டசபைத் தேர்தல்களில் வாக்குகளைத் திரட்டிக் கொள்வதற்காக வெறுப்பு அரசியலைக் கையில் எடுத்துக் கொண்டிருப்பவர்கள் அதன் மூலமாக பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு, சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படையான பிரச்னைகளிலிருந்து மக்களின் கவனத்தை மடைமாற்றிவிடலாம் என்று கணக்குப் போடுகின்றார்கள்.

ஆனால் நாட்டு மக்கள் பெரும்பான்மைவாத அரசியலின் வெளி வேடத்தையும் உண்மை முகத்தையும் உணர்ந்து விட்டார்கள். முஸ்லிம்களைத் துன்புறுத்துவதன் மூலமாக, வழிபாட்டுத் தலங்களை அழிப்பதன் மூலமாக கடந்த காலப் பெருமையை மீட்டெடுத்துவிடலாம் என்கிற போலி வாதத்துக்கும் பாசாங்குக்கும் மாய வலைக்கும் அவர்கள் பலியாக மாட்டார்கள்.

'உத்திரப்பிரதேச அரசு நிர்வாகத்தின் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்ந்தாலும் உத்திரப்பிரதேச முஸ்லிம்கள் தங்களின் நம்பிக்கை மீதான பந்தத்தை யும், தங்களின் மத அடையாளத்தையும், பண்பாட்டுடனான தொடர்பையும் நடைமுறைகளையும் ஒருபோதும் பலவீனமடைய விடமாட்டார்கள்.

சட்டரீதியான சர்ச்சைக்கு வழிபாட்டுத் தலத்தை இடிப்பதைக் கொண்டு தீர்வு காண்கின்ற தவறை எந்தவொரு அரசு அதிகாரமும் செய்து விடக் கூடாது.

தான்தோன்றித்தனமான அதிகார பிரயோகத்துக்குப் பதிலாக அரசியல் அமைப்புச் சட்ட உரிமைகளும், நீதியும், முறையான சட்டரீதியான நடவடிக்கைகளும்தாம் மேலோங்க வேண்டும்' என்றும் மலிக் முஅதசிம் குறிப்பிட்டுள்ளார்.

**செய்தித் தொகுப்பு:**
**T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**




நிருபமா ராவ்

**1937ஆம் ஆண்டு, இந்தியா காலனித்துவ அடக்குமுறைக்கும் நிச்சயமில்லாத விடுதலை பற்றிய எதிர்பார்ப்புக்கும் நடுவில் நாடு தொங்கிக் கொண்டிருந்த வேளையில் The Modern Review இதழில் The Rashtrapati (குடியரசுத் தலைவர்) என்கிற தலைப்பில் கட்டுரை ஒன்று வெளியானது. சாணக்யா எனும் புனைப்பெயரில் அந்தக் கட்டுரையை எழுதியவர் ஜவஹர்லால் நேரு என்பதை இன்று நாம் அறிந்திருக் கின்றோம். ஆனால் கட்டுரையை எழுதியது யார் என்பது அன்றைய வாசகர் எவரும் அறிந்திருக்கவில்லை.**

# தனிமனித வழிபாடு மக்களாட்சியைத் தடம் புரளச் செய்துவிடுவது எப்படி?


**- நிருபமா ராவ்**
**முன்னாள் வெளியுறவுச் செயலாளர், மூத்த இராஜதந்திரி**

**தமிழில் : எஸ். ஜவேரியா**

The Rashtrapati
by Chanakya

"Rashtrapati Jawaharlal ki Jai". The Rashtrapati looked up as he swiftly passed through the waiting crowds, his hands went up and were joined together in salute, and his pale hard face was lit up by a warm smile. It was a warm personal smile and the people who saw it responded to it immediately and smiled and cheered in return.

The smile passed away and again the face became stern and sad, impassive in the midst of the emotion that it had roused in the multitude. Almost it seemed that the smile and the gesture accompanying it had little reality behind them; they were just tricks of the trade to gain the goodwill of the crowds whose darling he had become. Was it so?

Watch him again. There is a great procession and tens of thousands of persons surround his car and cheer him in an ecstasy of abandonment. He stands on the seat of the car, balancing himself rather well, straight and seemingly tall, like a god, serene and unmoved by the seething multitude. Suddenly there is that smile again, or even a merry laugh, and the tension seems to break and the crowd laughs with him, not knowing what it is laughing at. He is godlike no longer but a human being claiming kinship and comradeship with the thousands who surround him, and the

அந்தக் கட்டுரை நவீன வரலாற்றில் அரசியல் சுய ஆய்வுக்கான மிக மிக விந்தையான நடவடிக்கைகளில் ஒன்றாக இன்றும் நீடிக்கின்றது. மக்கள் மத்தியில் செல் வாக்கும் புகழும் பெற்றிருந்த மக்கள் தலைவர் ஒருவர் தன்னுடைய புகழின் உச்சியில் இருந்த சந்தர்ப்பத்தில் தன்னுடைய சொந்தச் செல்வாக்கே நாட்டுக்கு என்னென்ன கேடுகளை விளைவிக்கக் கூடும் என்கிற கோணத்தில் தன்னுடைய பெயரைவெளிப்படுத்தாமல் எழுதியது விந்தையிலும் விந்தையே.

அந்த நாள்களில் நேரு ஒரு சாதாரண அரசியல்வாதி யாக இருக்கவில்லை. கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு அவர் விடுதலையின் அடையாளமாகவும், இந்தியாவின் கனவுகளின் உருவகமாகவும், விடுதலைக்கான ஏக்கத்தின் வடிவமாகவும் இருந்தார். அவர் மீது மக்கள் கொண்டிருந்த மோகமும் பற்றும் எல்லை கடந்ததாய் இருக்க, அந்தக் கட்டுரையை எழுதியவரின் பார்வையில் அந்த அளவு கடந்த மோகம் நிம்மதியைப் பறிப்பதாக இருந்தது.

'அந்த அளவுகடந்த பற்றிலும் மோகத்திலும்தான் ஜவஹர்லாலுக்கும் இந்தியாவுக்கும் ஆபத்து இருக்கிறது' என்று எழுதினார் அவர். 'ஏனெனில் சீசரிசம் என்கிற தனி மனித ஆட்சி ஒருபோதும் நாட்டுக்கு விடுதலையைப் பெற்றுத் தராது. கருணையும் பரிவும் நிறைந்த, திறமை யும் ஆற்றலும் நிறைந்த எதேச்சதிகாரியின் கீழ் சிறிது முன்னேற்றம் அடைந்தாலும், நாட்டின் வளர்ச்சி முடங்கி விடும்; மக்களின் உண்மையான விடுதலை இன்னும் தாமதமாகிவிடும்.' என்றெல்லாம் அவர் எழுதி இருந்தார்.

முசோலினி இத்தாலியிலும், ஹிட்லர் ஜெர்மனியிலும் எதேச்சதிகாரிகளாக் கோலோச்சிக் கொண்டிருந்த பின்னணி யில் நேரு இவற்றை எழுதினார். என்றாலும் எதேச்சதி காரம் தொடர்பான அவருடைய அச்சம் காலத்தைக் கடந்து இன்றும் பொருந்துகின்றது. மக்களாட்சி எதிர் கொள்கின்ற மிகப் பெரும் அச்சுறுத்தல் மேலிருந்து திணிக்கப்படுகின்ற அடக்குமுறை, அராஜக எதேச்சதி கார ஆட்சியின் வடிவில் வராது. சில நேரங்களில் அது

கீழிருந்து அதாவது மக்களிடமிருந்து கூடக் கிளம்பும். இயல்புக்கும் அதிகமான மகா ஆற்றல் படைத்தவராகத் தோற்றம் தருகின்ற ஒற்றை தலைவரிடம் தங்களின் பொறுப்பு களை ஒப்படைத்துவிடுகின்ற மக்களின் விழைவுகளிலிருந்தும் அந்த அச்சுறுத்தல் பேருருவம் எடுக்கும்.

## அரசியலில் பக்தியை நுழைக்காதீர்கள்

மாயக் கதைகளை உருவாக்குவதற்கான செழிப்பான நிலம்தான் அரசியல். நாடுகள் தம்மைப் பற்றியே கதைகளைச் சொல் வதுண்டு; தனி மனிதர்களை மையமாகக் கொண்ட கதைகளாய் - ஜார்ஜ் வாஷிங்டன், டெலாவேர் ஆற்றைக் கடந்த கதை, 1966 இல் யாங்சீ பெருநதியை மாவோ கடந்த கதை போன்ற கதைகளைச் சொல்லலாம்.

மீட்பர் என்று கருதப்படுகின்ற ஒற்றை மனிதர் மீது ஒரு சமூகம் தன்னுடைய நம்பிக்கைகளையும் அச்சங்களையும் குவித்து விடுகின்ற போக்குதான் இது. ஆனால் தலைவர்கள் வழிபாட்டுக்குரிய பொருள்களாகப் பேருருவம் எடுக்கின்ற போது ஜனநாயகம் மிக அபூர்வமாகத்தான் தாக்குப் பிடித்து நிற்கும்.



நேரு இதனைப் புரிந்து கொண்டிருந்தார். The Rashtrapati என்கிற அந்தக் கட்டுரையில் துருத்திக் கொண்டு நிற்கும் சொல் ‘எதேச்ச திகாரம்’ அல்ல; ‘நாட்டின் வளர்ச்சி முடங்கி விடும்’ என்கிற கூற்றுதான். இந்தியா எதேச்ச திகார நாடாக மாறிவிடுமோ என்பதல்ல; இந்தியா வளர்ச்சியடையாமல் முடங்கி விடுமோ என்பதுதான் அவருடைய பெரிய அச்சம். ஒற்றை மனிதரிடம் விடுதலையையும் ஈடேற்றத்தையும் எதிர்பார்ப்பதற்கு மக்கள் பழக்கப்பட்டு விடுவார்களேயானால் அவர்கள் குடியரசு வாழ்வைத் தாங்கும் பண்புகளை இழந்து விடுவார்கள். ஐயம் கொள்ளுதல், விவாதித்தல், பங்கேற்றல், பொறுப்பு உணர்வு ஆகியவற்றை இழந்து விடுவார்கள்.

நேருவைப் பொறுத்தவரை விடுதலை என்பது வெறுமனே ஆட்சியை ஆங்கிலேயர் களிடமிருந்து இந்தியர்களிடம் மாற்றுவதாக மட்டும் இருக்கவில்லை; குடிமகனின் மனத் தின் விடுதலையைத்தான் அவர் நாட்டின் விடுதலையாகப் பார்த்தார்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கும் வேளையில் - அதாவது நாடு ஒரு குடியரசாக மலர்கின்ற தருணத்தில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் இதே கருத்தை இன்னும் கடுமையான மொழியில் மீண்டும் வலிமையாக முன்வைத்தார். 1949 நவம்பர் 25 அன்று அரசியல் நிர்ணய சபை யில் உரையாற்றும் போது அவர் பகிர்ந்து கொண்ட எச்சரிக்கை இன்றும் இந்திய அரசியல் சித்தாந்தத்தில் முக்கியமான, வலு வான எச்சரிக்கையாக நீடிக்கி ன்றது. ‘மதத்தில் பக்தி இருப்பது ஆன்மா ஈடேற்றம் பெறுவதற்கான பாதையாக இருக்கலாம். ஆனால் அரசியலில் பக்தியும் சரி, தனி மனித, நாயக வழிபாடும் சரி, நாட்டின் சீரழிவுக்கும் எதேச்சதி காரத்திற்கும் உறுதியாக வழி வகுக் கும்’ என்றார் அவர்.

இந்தியப் பண்பாட்டைப் பற்றிய ஆழ மான புரிதல்தான் இந்தச் சொற்களுக்கு வித் திட்டுள்ளது. நம்முடைய ஆன்மிகப் பாரம் பர்யங்களில் பக்திக்குத் தனி இடம் உண்டு. ஆனால் அரசியல் முற்றிலும் மாறுபட்ட கள மாகும். அங்கு பக்திக்குப் பதிலாக ஆய்வும் விமர்சனமும், சரணாகதிக்குப் பதிலாக பதில் சொல்கின்ற பொறுப்பு உணர்வும்தாம் இருக்கும்.

பாரம்பரிய எதேச்சதிகாரத்தைக் காட்டி லும் ஜனநாயகக் கலாச்சாரம் மெள்ள மெள்ள சிதைந்து சீரழிவதையே அவர் அதிகமாக அஞ்சினார். அரசியல் அமைப்புச் சட்டங்களை அழகாக எழுதிவிடலாம். தேர்தல்களையும் முறையாக நடத்தி விடலாம். ஆனால் மனித மனங்களின் பழக்கங்களைச் சார்ந்துதான்

குடியரசுகள் இயங்குகின்றன. கடினமான கேள்விகளையும் வலிந்து கேட்கின்ற திராணியுள்ள குடிமக்களை, அதிகாரங்கள் குவிக்கப்படுவதை அவநம்பிக்கையோடு பார்க்கின்ற மக்களை, நாட்டின் மீதான விசுவாசத்துக்கும் தனிமனிதர் மீதான விசுவாசத்துக்கும் இடையிலான வேறுபாட்டை நன்கு உணர்ந்து கொண்ட மக்களைச் சார்ந்தே குடியரசுகள் இயங்குகின்றன.

ஒரு யுகத்தைத் தாண்டிய இந்தக் கவலை தான் நம்முடைய நூற்றாண்டை வரையறுக்கின்றது. அண்மையில் தொன்மையான கிரேக்கக் காவியமான தி ஓடிஸியைத் தழுவி திரைப்பட இயக்குநர் கிறிஸ்டோஃபர் நோலன் இயக்கி வெளியிட்ட தி ஓடிஸி திரைப்படத்தையும் எக்ஸ் தளத்தின் எலான் மாஸ்க், அமெரிக்க அதிபர் டோனால்ட் ட்ரம்ப் ஆகியோரின் காலத்தையும் குறிப்பிட்டு எழுதுகையில் அமெரிக்க பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான எஸ்ரா கிளைன் மனித மகத்துவம் பற்றிய இரண்டு கண்ணோட்டங்களுக்கு இடையிலான மோதலை நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்று கருத்துரைத்துள்ளார்.

ஒரு கண்ணோட்டமோ கட்டுப்பாட்டையும் பரஸ்பர பரிமாற்றத்தையும், தன்னை விட சமூகத்தோடு அதிகமாகப் பிணைந்திருக்கின்ற சிரமம் நிறைந்த கலையையும் கொண்டாடுகின்றது. இரண்டாவது கண்ணோட்டமோ தகர்வையும் இடையூறையும், வெற்றியையும், விதிகளை வலிந்து மீறுகின்ற, நெறிமுறைகளை உடைத்து நொறுக்குகின்ற, நிறுவனங்களை வளைத்து முறிக்கின்ற செல்வாக்கு மிக்க தனி மனிதர்களையும் கொண்டாடுகின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மீட்பர் உருவாகின்றார்

அரசியல் அரங்கிலும் சரி, தொழில்நுட்ப உலகிலும் சரி நவீன யுகத்து சக்திமான் மீதான ஈர்ப்பும் கவர்ச்சியும் வரம்புகளையும் எல்லைகளையும் தாண்டிய எழுச்சிக்கான எதிர்பார்ப்பில்தான் அடங்கியிருக்கின்றது. செவ்வாய்க் கிரகத்தையே வளைத்துப் போட்டு பட்டா போட்டு விற்பனை செய்யத் துடிக்கின்ற தொழிலதிபரும், ஊழலையும் உதவாக்கரைகளையும் ஓட ஓட விரட்டி அடிப்பேன் என்று வாக்குறுதி அளிக்கின்ற புதியவரும் மக்களை ஈர்க்கின்றார்கள். சமூக ஊடகங்கள் நிறைந்த இன்றைய உலகில் இது போன்ற கதையாடல்கள் சற்றொப்ப காவிய அந்தஸ்தை மிக எளிதாக அடைந்து விடுகின்றன. அரசியல் களமே நாடக மேடை ஆகிவிடுகின்றது. குடிமக்களோ பார்வையாளர்களாய் மாறிவிடுகின்றார்கள்.

ஹோமர் இந்த முரண்பாட்டை வெகுவாகக் கொண்டாடியிருப்பார். அவருடைய நாயகன் ஒடிசியஸ் சொல்லப் போனால் வெறுமனே வெற்றியாளனாக இருக்கவில்லை. அவன் குறைகளும் சூழ்ச்சியும் அமைதியின்மையும் கொண்டிருந்த ஒரு மனிதனாக, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தன்னுடைய புகழுக்கும் செல்வாக்குக்குமே இரையாகி விடுபவனாகத்தான் இருந்தான். தி ஒடிசியின் மகத்துவம் நாயகனின் வலிமையைக் கொண்டாடுவதில் இருக்க வில்லை. அதற்கு மாறாக நாயகனைக் கட்டுப்படுத்துகின்ற வரம்புகளையும் எல்லைகளையும் அங்கீகரிப்பதில்தான் அதன் மகத்துவம் இருக்கின்றது. அந்தக் காவியம் வெற்றிக் கதையுடன் முடிவுறுவதில்லை. அதற்கு மாறாக நாயகன் தன்னுடைய சமூகத்திடம்

> தனிமனித வழிபாட்டின் துயரம் என்னவெனில், அது நமது சிந்திக்கும் திறனையும் முடிவெடுக்கும் ஆற்றலையும் அடகு வைத்து விடவும், பாராட்டுதலை தேசபக்தியாகக் கருதவும் ஊக்குவிக்கின்றது. முறையாகப் பதியப்படாத, பெரும்பாலும் கண்களுக்குப் புலப்படாத கோடிக் கணக்கான சாமான்ய ஆண்களின், பெண்களின் உழைப்பால்தான் வரலாறு உருவாகின்றது என்பதற்குப் பதிலாக ஒற்றை நாயகர்களால்தான் வரலாறு படைக்கப்படுகின்றது என்கிற நம்பிக்கையை விதைக்கவே அது முயல்கின்றது.

மீள்வதில்தான் நிறைவு பெறுகின்றது. எந்த ஒரு தனி மனிதரும் அவர் என்னதான் பெரும் பெரும் ஆற்றல்களையும் திறமைகளையும் பெற்றிருந்தாலும் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய கடமைகளுக்கு அப்பாற்பட்ட வராக தனித்து நிற்க முடியாது என்பதுதான் அது தருகின்ற மிகப்பெரிய பாடம்.

இந்தப் பாடத்தையே நேருவும் அம்பேத் கரும் தத்தம் பாணியில் இந்தியாவுக்குக் கற்பிக்க முயன்றார்கள். 'இன்றியமையாத ஒற்றை மனிதன்' என்ற கருத்துக்கு எதிரான வாதமாகத்தான் அவர்கள் குடியரசைப் பார்த்தார்கள். தனி மனிதர்களைவிட நிறுவனங்களே மிக அதிகமான முக்கியத் துவம் கொண்டவை என்றும், எந்தவொரு அதிகார பீடமும் தம்மைக் காட்டிலும் பெரிய சக்தியின் முன்னால் பதில் சொல்லக் கடமைப்பட்டதே என்றும் அவர்கள் வாதிட் டார்கள். ஜனநாயகத்துக்கு தொலைநோக்கு மிக்க தலைவர்கள் தேவைப்படுகின்றார்கள். அதே சமயம் எதனையும் எளிதில் ஏற்க மறுக்கின்ற, ஐயம் கொள்கின்ற, சிந்திக்கின்ற மக்களும் தேவை.

தனிமனித வழிபாட்டின் துயரம் என்ன வெனில், அது நமது சிந்திக்கும் திறனையும் முடிவெடுக்கும் ஆற்றலையும் அடகு வைத்து விடவும், பாராட்டுதலை தேசபக்தியாகக் கருதவும் ஊக்குவிக்கின்றது. முறையாகப் பதியப்படாத, பெரும்பாலும் கண்களுக்குப் புலப்படாத கோடிக்கணக்கான சாமான்ய ஆண்களின், பெண்களின் உழைப்பால்தான் வரலாறு உருவாகின்றது என்பதற்குப் பதிலாக ஒற்றை நாயகர்களால்தான் வரலாறு படைக்கப்படுகின்றது என்கிற நம்பிக்கையை விதைக்கவே அது முயல்கின்றது.

ஒரு குடியரசின் வெற்றியின் உண்மை யான அளவுகோல் அதனால் அசாதாரணமான பெரும் தலைவர்களை உருவாக்க முடிகின் றதா என்பதில் இல்லை; அவர்களைச் சார்ந் திராமலே அதனால் தன்னைத்தானே புதுப் பித்துக் கொள்ள முடிகின்றதா என்பதில்தான் அது இருக்கின்றது.


# AMY LAW HOUSE

## இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்




**A. முகம்மது யூசுப் B.A.B.L.,**
**(வழக்கறிஞர் நோட்டரி பப்ளிக்)**
**கரூர் மாநகராட்சி வழக்கறிஞர்,**
**இந்தியன் ஓவர்சிஸ் வங்கி**
**சட்ட ஆலோசகர்,**
No. 12. போலீஸ் லைன், ஹேமலா ஹோட்டல் அருகில், கரூர் - 1
**Cell :** 94433 38397, 90801 02145
**E-mail :** lr.muhamedyousuff@gmail.com

**K. ஷகிலா பேகம் M.C.A., M.Phil., M.A. (Crim)., LLB.,**
**வழக்கறிஞர்**
No. 12. போலீஸ் லைன், ஹேமலா ஹோட்டல் அருகில், கரூர் - 1
**Cell :** 99448 76833
**E-mail :** k.shakilayousuff@gmail.com

## அத்தியாயம்: 35

# ஃபாத்திர்

## முன்னுரை

***பெயர்:*** முதல் வசனத்தில் இருக்கின்ற ஃபாத்திர் என்கிற சொல்தான் இந்த அத்தியாயத்தின் பெயராகச் சூட்டப்பட்டுள்ளது. அதாவது ஃபாத்திர் என்கிற சொல் இடம் பெற்றுள்ள அத்தியாயம் என்று மட்டுமே இதற்குப் பொருள். இந்த அத்தியாயத்துக்கு அல்மலாயிகா என்கிற பெயரும் உண்டு. அந்தச் சொல்லும் முதல் வசனத்தில் வந்துள்ளது.

***அருளப்பட்ட காலம்:*** இதில் கருத்துகள் எடுத்துரைக்கப்படுகிற பாணியே இது சற்றொப்ப மக்காவின் மத்தியக் காலத்தில் அருளப்பட்டிருக்க வேண்டும் என்பதற்குச் சான்றளிக்கின்றது. அந்தக் காலகட்டத்திலும் எதிர்ப்பு மிகப் பெரும் அளவில் உக்கிரமடைந்திருந்த நாள்களில் - நபிகளாரின் அழைப்பைத் தோல்வியுறச் செய்வதற்காக மிக மிக மோசமான சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நாள்களில் இந்த அத்தியாயம் அருளப்பட்டிருக்க வேண்டும்.

***விவாதப் பொருளும் கருத்துரையும்:*** முஹம்மத் நபிகளாரின் ஏகத்துவ அழைப்புக்கு எதிராக மக்காவாசிகளும் அவர்களின் நாட்டாண்மைகளும் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளை பரிவும் கனிவும் நிறைந்த அறிவுரை கூறும் தொனியில் கண்டிப்பதும், எச்சரிப்பதும், அறிவார்ந்த முறையில் நல்லுரைகளைச் சொல்லி அறிவுறுத்துவதும் தாம் உரையின் நோக்கமாகும். இந்தக் கருத்துரையின் சுருக்கம் வருமாறு: ‘நபிகளாரின் மீதும் நபிகளாரின் ஏகத்துவ அழைப்பின் மீதும் நீங்கள் கொண்டுள்ள கோபமும், நீங்கள் மேற்கொண்டு வருகின்ற சூழ்ச்சிகளும் கயமைத்தனமான நடவடிக்கைகளும், அந்த அழைப்பைத் தோல்வியுறச் செய்வதற்காக நீங்கள் வகுத்து வருகின்ற வியூகங்களும் உண்மையில் அந்த அழைப்பை எந்தவகையிலும் பாதிக்காது. அதற்கு மாறாக அவையனைத்துமே உங்களுக்கு எதிராகத்தான் திரும்பிக் கொண்டிருக்கின்றன. நபிகளாரின் பேச்சை நீங்கள் கேட்கவில்லையெனில் அது உங்களைத்தான் பாதிக்குமே தவிர, அது அவரை எந்தவகையிலும் பாதிக்காது. அவர் என்னவெல்லாம் சொல்கின்றாரோ அவற்றை ஆழ்ந்து கவனியுங்கள்; அதில் அப்படியென்னதான் தவறு இருக்கின்றது?

அவர் இணைவைப்பை மறுக்கின்றார். நீங்களே கண்களைத் திறந்து பாருங்களேன். இந்த உலகத்தில் இணைவைப்பை மெய்ப்பிக்கக்கூடிய அறிவார்ந்த, வலுவான சான்றுகள் எங்கேனும் தென்படுகின்றனவா, என்ன?

அவர் ஏகத்துவக் கோட்பாட்டின் பக்கம் அழைப்பு விடுக்கின்றார். நீங்களே அறிவைப் பயன்படுத்தி ஆய்ந்து பாருங்களேன். வானங்களையும் பூமியையும் படைத்த அல்லாஹ்வைத் தவிர இறைமைப் பண்புகளையும் இறையாண்மையையும் இறை அதிகாரங்களையும் கொண்டிருக்கின்ற வேறு யாராவது இந்தப் பேரண்டத்தில் எங்காவது இருக்கின்றார்களா, என்ன?

இந்த உலகத்தில் எந்தப் பொறுப்பும் இல்லாதவர்களாக நீங்கள் இல்லை என்றும், அதற்கு மாறாக உங்களுடைய செயல்கள் குறித்து நாளை இறைவனிடம் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு உங்களுக்கு

28ஆம் பக்கம் பார்க்க...

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

# நீங்கள் நடந்து வந்தால் அவன் ஓடி வருவான்

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கூறுகின்றான்:**

**'நான் என்னுடைய அடியான் என்னைக் குறித்து வைத்திருக்கின்ற எண்ணத்தின் பக்கமே நிற்கின்றேன். அவன் என்னை நினைவு கூர்கின்ற போது நான் அவனுடனேயே இருக்கின்றேன். அவன் தன்னுடைய மனதுக்குள் என்னை நினைவுகூர்ந்தால் நானும் என்னுடைய மனதுக்குள் அவனை நினைவுகூர்கின்றேன். அவன் என்னை ஏதேனுமோர் அவையில் நினைவு கூர்ந்தால் நான் அதனை விடச் சிறப்பான அவையில் அவனை நினைவு கூர்கின்றேன். அவன் என்னை நோக்கி ஓர் அங்குலம் முன்னேறி வந்தால் நான் அவனை நோக்கி ஒரு முழம் நெருங்கி வருகின்றேன். அவன் என்னை நோக்கி ஒரு முழம் முன்னேறி வந்தால் நான் அவனுக்கு இரண்டு கைகளை விரிக்கின்ற அளவில் நெருங்கி விடுகின்றேன். அவன் என்னை நோக்கி நடந்து வந்தால் நான் அவனை நோக்கி ஓடி வருகின்றேன்.'**

அறிவிப்பாளர் : அபூஹுரைரா(ரலி)
நூல் : புகாரி

இறைவன் தன்னுடைய அடியானுடன் எந்த அளவுக்கு நெருக்கமான உறவும் பிணைப்பும் கொண்டிருக்கின்றான் என்பது பற்றிய உயிர்த்துடிப்பு மிக்க சித்திரம் ஒன்று இந்த நபிமொழியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 'என்னுடைய அடியான் என்னைக் குறித்து வைத்திருக்கின்ற எண்ணத்தின் பக்கமே நான் நிற்கின்றேன்' என்பதுதான் இந்த நபிமொழியில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அடிப்படையான கருத்து ஆகும். எண்ணத்திலும் செயலிலும் அடியான் இறைவனுடன் எந்த வகையில் நடந்து கொள்கின்றானோ அதே போன்றே இறைவனும் அடியானுடன் நடந்து கொள்கின்றான்.

இந்த வகையில் முஸ்லிம் நபிமொழித் தொகுப்பு நூலில் தரப்பட்டுள்ள நபிமொழியில் 'என்னுடைய அடியானின் எண்ணத்தின் பக்கமே நான் நிற்கின்றேன். அவன் என்னைக் குறித்து நல்லெண்ணம் கொண்டவனாக இருந்தால் நானும் அவனுக்கு நன்மைகளைச் செய்பவனாக இருக்கின்றேன். அவன் என்னைக் குறித்து தீய எண்ணம் கொண்டிருந்தால் அது அவனுக்கே கேடாக முடியும்.' என்கிற சொற்கள் இடம் பெற்றுள்ளன.

மனித வாழ்வு இரண்டு வகைகளாய் இருக்கின்றன. ஒன்றை நாம் இறைப்பற்று நிறைந்த வாழ்க்கை என்கின்றோம். இரண்டாவது வகையான வாழ்வு இறைவனை மறந்து, துறந்து, இறைவனைப் பற்றிய அக்கறை இல்லாமல் வாழ்வதாகும். வாழ்க்கைத் திட்டத்தை, வாழ்வுக்கான நெறிமுறைகளை வகுக்கும் போது இறைவனின் விருப்பத்தையும் இறைவனின் சட்டங்களையும் சற்றும் கருத்தில் கொள்ளாமல் இயங்குவதாகும்.

இரண்டு வகையான வாழ்வின் விளைவுகளும் இம்மையிலும் சரி, மறுமையிலும் சரி ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒருபோதும் இருக்கவே இயலாது. இந்தப் பேருண்மைதான் இரத்தினச் சுருக்கமாக 'என்னுடைய அடியான் என்னைக் குறித்து கொண்டிருக்கின்ற எண்ணத்தின் பக்கமே நான் நிற்கின்றேன்' என்கிற கருத்துச் செறிவுமிக்க சொற்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த இரத்தினச் சுருக்கமான செய்திக்கான விளக்கத்தில் 'அடியான் தன்னுடைய இறைவனை நினைவுகூர்கின்ற போது இறைவனும் அடியானை நினைவுகூர்கின்றான். அவன் இறைவனை நோக்கி முன்னேறிச் செல்கின்ற போது அதனை விடப் பன்மடங்கு வேகத்தில் இறைவனும் அவனை நோக்கி முன்னேறிச் செல்கின்றான்; அவனை நெருங்கிவிடுகின்றான்' என இந்த நபிமொழியில் சொல்லப்பட்டுள்ள விவரங்களும் அடங்கும்.

**நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா**

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இருக்கின்றது என்றும், மேலும் இந்த உலக வாழ்வுக்குப் பிறகு மற்றுமொரு வாழ்வு இருக்கின்றது என்றும், அந்த வாழ்வில் ஒவ் வொருவரும் தம்முடைய செயல்களுக் கான பலனை கண்கூடாகப் பார்க்க வேண்டி யிருக்கும் என்றும் அவர் சொல்கின்றார். அது தொடர்பான உங்களின் ஐயங்களும் வியப்பும் எந்த அளவுக்கு அடிப்படை யற்றவை என்கிற கோணத்தில் நீங்களே யோசித்துப் பாருங்களேன்.

தினம் தினம் இரவும் பகலும் வாழ்வும் மரணமும் மாறி மாறி மீண்டும் மீண்டும் நிகழ்ந்து கொண்டிருப்பதை உங்களுடைய கண்கள் பார்த்துக் கொண்டிருக்கவில்லையா, என்ன? அப்படியிருக்க உங்களை ஒற்றை இந்திரியத் துளியிலிருந்து படைத்த இறை வனுக்கு மட்டும் மறுபடியும் படைக்கின்ற ஆற்றல் இல்லை; அதற்கான சாத்தியமே இல்லை என ஏன் நினைக்கின்றீர்கள்? நல்ல வர்களும் தீயவர்களும் சமமானவர்களாய் ஆக மாட்டார்கள் என்பதற்கு உங்களின் அறிவு சான்று பகரவில்லையா, என்ன? அப்படியானால் நீங்களே சொல்லுங்களேன், எது அறிவார்ந்த விஷயம்? நல்லவர்களின் இறுதிமுடிவும் தீயவர்களின் இறுதிகதியும் ஒரே மாதிரியானதாக - அதாவது இரண்டு பேருமே மண்ணோடு மண்ணாகி அழிந்து போவதாக - இருப்பதுதான் சரியா? அல்லது நல்லவர்களுக்கு அவர்கள் செய்த நன்மை களின் அடிப்படையில் நற்கூலியும் தீயவர் களுக்கு அவர்களின் தீமைகளின் காரணமாகத் தண்டனையும் தரப்படுவது சரியா?

மேற்படியான அறிவுப்பூர்வமான, யதார்த்தங்களின் அடிப்படையிலான விஷ யங்களை நீங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின் றீர்கள் எனில், போலியான தெய்வங்களுக்கு அடிபணிந்து வாழ்வதைத் துறக்க மாட்டீர்கள் எனில், அதற்கும் மேலாக தம்மைத் தாமே எந்தவொரு பொறுப்பும் இல்லாதவராக நினைத்துக் கொண்டு எந்தக் கட்டுப்பாட்டுக் கும் உட்படாதவர்களாய் மனம் போன போக்கில் இந்த உலகில் வாழ விரும்புகின் றீர்கள் எனில், அதனால் இறைத்தூதருக்கு என்ன இழப்பு ஏற்படப் போகின்றது? நீங்கள்தான் மிக மோசமான, பயங்கரமான கதிக்கு ஆளாகப் போகின்றீர்கள். உங்களுக்குச் செய்தியை எடுத்துரைத்து சத்தியத்தைப் புரிய வைப்பதுமட்டும்தான் இறைத்தூதர் மீதான பொறுப்பு ஆகும். அந்தப் பொறுப்பை அவர் செவ்வனே நிறைவேற்றி முடித்து வருகின் றார்' என்கிற ரீதியில் அவர்களுக்கு கருத்துரை நல்கப்பட்டுள்ளது.

'அழைப்பு விடுத்து, நல்லுரை வழங்கு கின்ற பொறுப்பை எந்தக் குறையும் இன்றி செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக் கின்றீர்கள். வழிகேடான பாதையையே விடாப்பிடியாகப் பிடித்துத் தொங்கிக் கொண் டிருப்பவர்கள் நேர்வழிகாட்டுதலை ஏற்க மறுக்கின்றார்கள் எனில் அதற்கு நீங்கள் எந்த வகையிலும் பொறுப்பாக மாட்டீர்கள்' என்றும் இந்த உரைத்தொடரின் ஊடே முஹம்மத் நபிகளாருக்கு மீண்டும் மீண்டும் ஆறுதல் அளிக்கப்படுகின்றது.

அத்துடன், 'உங்களின் அழைப்பை ஏற்க மறுப்பவர்களின் நடத்தையைப் பார்த்து நீங்கள் வேதனையடைய வேண்டாம்; துக்கப் படவும் வேண்டாம். அவர்களை நேர்வழி யில் மீட்டுக் கொண்டு வர வேண்டும் என்கிற கவலையில் உங்களை நீங்களே மாய்த்துக் கொள்கின்ற அளவுக்கு தவித்து உருகவும் வேண்டாம். அதற்குப் பதிலாக உங்களின் பேச்சைக் காது கொடுத்துக் கேட்பதற்கு ஆயத்தமாக இருக்கின்ற மக்களின் மீது உங் களின் கவனத்தைச் செலுத்துங்கள்' என்றும் நபிகளாருக்கு விளக்கப்படுகின்றது.

இறைநம்பிக்கை கொண்டவர்களுக்கும் - அவர்களின் உள்ளங்கள் உறுதியடைகின்ற விதத்திலும், அவர்கள் அல்லாஹ்வின் வாக் குறுதிகள் மீது முழுமையான நம்பிக்கையை வைத்தவாறு சத்தியப் பாதையில் நிலை குலையாமல் நிலைத்து நிற்கின்ற வகையிலும் - இது தொடர்பாக பெரும் பெரும் நற் செய்திகள் தரப்பட்டிருக்கின்றன.

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில் 31வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

**உம்ரா குரூப்:**

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது.
உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

அமானத் TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

நாள்தோறும் பல்வேறு கூட்டங்கள் நடைபெறுகின்றன. உரை நிகழ்த்திய வரோ, கேட்டவர்களோ இப்பகுதிக்கு உரைகளை அனுப்பலாம். உரையுடன் புகைப்படத்தையும் உரை இணைப்பையும் samarasam.article@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும். 2026 ஆகஸ்ட் 28ஆம் நாள் சென்னை முகப்பேர் மஸ்ஜிதே ஜைனபில் **K. ஜலாலுத்தீன்** ஆற்றிய ஜும்ஆ உரை இந்த இதழின் மேடையை அலங்கரிக்கிறது.

மேடை 35

# ஆளுமை மேம்பாட்டிற்கான பத்து அம்சத் திட்டங்கள்

மனிதர்கள் வெற்றி பெறுவதற்குத் தேவையான ஆளுமைப் பண்புகளை திருக்குர்ஆன் அழகிய முறையில் எடுத்துரைக்கிறது:

‘ஆண்கள் மற்றும் பெண்களில் எவர்கள் முஸ்லிம்களாகவும், நம்பிக்கையாளர்களாகவும், கீழ்ப்படிபவர்களாகவும், வாய்மையாளர்களாகவும், பொறுமையுடையோராகவும், அல்லாஹ்வின் முன்னிலையில் பணிபவர்களாகவும், தானதர்மம் செய்பவர்களாகவும், நோன்பு நோற்பவர்களாகவும், தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாப்பவர்களாகவும் இன்னும் அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூருபவர்களாகவும் இருக்கின்றார்களோ, திண்ணமாக அவர்களுக்காக அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார் செய்து வைத்துள்ளான்.’ (திருக்குர்ஆன் 33:35)

இவை நமது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் பத்து அம்சத் திட்டங்கள் எனக் கருதலாம்.

### ஆண் – பெண்: இறைவனின் முன்னிலையில் சமமான அடியார்கள்

நபி(ஸல்) அவர்களின் மனைவியருள் ஒருவரான அன்னை உம்மு ஸலமா(ரலி) அவர்கள், ‘அல்லாஹ்வின் தூதரே! குர்ஆனின் வசனங்கள் ஆண்களை நோக்கியே உரையாடுகின்றனவே! பெண்களைப் பற்றி ஏன் குறிப்பிடப்படவில்லை?’ என்று கேட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

குர்ஆன் மனிதர்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் அருளப்பட்டது. மொழியின் இலக்கண மரபில் ஆண்பால் பயன்படுத்தப்படும் இடங்களில் பெண்களும் உள்ளடங்குவர். இருப்பினும் அன்னை உம்மு ஸலமா(ரலி) அவர்களின் வேண்டுகோளுக்கு உரிய பதிலாக ஆண்களையும் பெண்களையும் தனித்தனியாகக் குறிப்பிட்டு சூரத்துல் அஹ்ஸாப் 35ஆவது வசனத்தை இறைவன் அருளினான்.

### ஈருலக வெற்றிக்கான பத்துப் பண்புகள்

திருக்குர்ஆனுடைய 33ஆவது அத்தியாயம் அல் அஹ்ஸாப் 35ஆவது வசனம் பின்வரும் பத்து பண்புகளை ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக எடுத்துரைக்கிறது.

- **இஸ்லாம் - இறைவனுக்குக் கீழ்ப்படிந்த வாழ்க்கை** இறைவனுக்குக் கீழ்ப்படிந்து இஸ்லாமிய நெறியில் வாழும் ஆண்களும் பெண்களும்
- **ஈமான் - உள்ளத்தில் வேரூன்றிய நம்பிக்கை** இறைநம்பிக்கையை உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு வாழும் ஆண்களும் பெண்களும்
- **கீழ்ப்படிதல் - இறைக்கட்டளைக்கு இணங்குதல்** அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழும் ஆண்களும் பெண்களும்

- **வாய்மை – உண்மையை வாழ்வாக்குதல்** சொல்லிலும் செயலிலும் உண்மையாளர்களாக விளங்கும் ஆண்களும் பெண்களும்
- **பொறுமை – நன்மையில் நிலைத்திருத்தல்** துன்பங்களிலும் சோதனைகளிலும் பொறுமை யுடன் நிலைத்திருக்கும் ஆண்களும் பெண்களும்
- **குஷூஉ – இறைவனின் முன்னிலையில் பணிவு** அல்லாஹ்வின் முன்னிலையில் பணிவுடனும் உள்ளச்சத்துடனும் நிற்கும் ஆண்களும் பெண் களும்
- **தர்மம் – கொடுக்கும் கை** இறைவழியில் தான தர்மம் செய்யும் ஆண்களும் பெண்களும்
- **நோன்பு – தக்வாவை வளர்க்கும் பயிற்சி** நோன்பைக் கடைப்பிடிக்கும் ஆண்களும் பெண் களும்
- **கற்பைப் பேணுதல் – ஒழுக்கத்தின் காவல்** தமது கற்பையும் ஒழுக்கத்தையும் பேணிப் பாது காக்கும் ஆண்களும் பெண்களும்
- **திக்ர் – அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்தல்** அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூரும் ஆண் களும் பெண்களும்

## இறைவனின் வாக்குறுதி

'இத்தகைய பண்புடையவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் தயார் செய்து வைத்திருக்கிறான்' இதுவே இந்தப் பத்து பண்புகளின் மகத்துவத்தை உணர்த்துகிறது.

## வழிபாடுகளுக்கு அப்பால் – நற்குணங்களின் உலகம்

நாம் முஸ்லிம்களாக வாழ்கிறோம். ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றுகிறோம்; நோன்பு நோற் கிறோம்; வசதியுள்ளவர்கள் ஜகாத் வழங்குகிறோம்; ஹஜ் செய்கிறோம். இவற்றைச் செய்வதன் மூலம் நமது இஸ்லாமிய வாழ்க்கை முழுமை பெற்றுவிட்ட தாக எண்ணிவிடக் கூடாது.

இஸ்லாம் என்பது சில வழிபாடுகளின் தொகுப்பு மட்டுமல்ல. அது மனிதனின் உள்ளத்தையும் நடத்தை யையும் உறவுகளையும் ஒழுக்கத்தையும் செம்மைப் படுத்தும் முழுமையான வாழ்வியல் நெறியாகும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நான் நற் குணங்களை முழுமைப்படுத்துவதற்காகவே அனுப் பப்பட்டுள்ளேன்' (அல் அதபுல் முஃப்ரத் - 273, முஅத்தா மாலிக்)

எனவே தொழுகை நமது நற்குணத் தில் வெளிப்பட வேண்டும்; நோன்பு நமது சுயக்கட்டுப்பாட்டில் வெளிப்பட வேண்டும்; இறை நம்பிக்கை - ஈமான் நமது நடத்தையில் வெளிப்பட வேண்டும்.

## இறைநம்பிக்கை (ஈமான்) – நாவைத் தாண்டி உள்ளத்தில் நிலைபெற வேண் டியது

நபி(ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கைக் காலத்தில் சில நாட்டுப்புற அரபிகள் வந்து, 'நாங்களும் ஈமான் கொண்டுவிட்டோம்' என்று கூறினர்.

இது குறித்து இறைவன் திருமறை யில் குறிப்பிடுகின்றான்: 'இந்த நாட்டுப் புற அரபிகள் கூறுகின்றார்கள்: 'நாங்கள் நம்பிக்கை கொண்டோம்' இவர்களிடம் நீர் கூறும்: 'நீங்கள் நம்பிக்கை கொள்ள வில்லை; வேண்டுமானால், 'நாங்கள் கீழ்ப்படிந்தோம்' என்று கூறுங்கள். நம்பிக்கை இன்னும் உங்கள் இதயங் களில் நுழையவில்லை. '(திருக்குர்ஆன் 49:14)

இறைநம்பிக்கை என்பது வெறும் வெளிப்புற அடையாளமல்ல என்பதை இந்த இறை வசனம் உணர்த்துகிறது.

## ஈமானை முழுமைப்படுத்தும் அன்பும் வெறுப்பும்

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யார் அல்லாஹ்வுக்காக நேசித்து, அல்லாஹ்வுக்காக வெறுத்து, அல்லாஹ் வுக்காகக் கொடுத்து, அல்லாஹ்வுக்



K. ஜலாலுத்தீன்

காகத் தடுத்துக் கொண்டாரோ, அவர் ஈமானை முழுமைப்படுத்திக் கொண்டார்' (அபூ உமாமா (ரலி) - சுனன் அபூதாவூத் 4681)

இதன் அடிப்படையில், ஒரு முஸ்லிம் எந்தச் செயலைச் செய்வதற்கு முன்பும் தன்னைத்தானே சில கேள்விகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும்:

இது அல்லாஹ்வுக்குப் பிரியமானதா?, இது ஹலாலா, ஹராமா?, இது உண்மையா, பொய்யா? இது நியாயமா, அநியாயமா?

நமக்குப் பிடிக்காததாக இருந்தாலும், நமக்கு இழப்பை ஏற்படுத்தினாலும், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் விரும்புவது அதுவாக இருந்தால் அதனை ஏற்றுக் கொண்டு செயல்படுவதே உண்மையான ஈமானின் அடையாளமாகும்.

## செவியேற்றோம்; கீழ்ப்படிந்தோம்

நபி(ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் கலிமாவின் அடிப்படையில் வாழ்ந்தனர். இறைவனுக்குச் சிரத்தையுடன் கீழ்ப்படிந்து வாழ்ந்தனர். நபிகளாரின் வழிமுறையை மாற்றமின்றி பின்பற்றினர்.

'நாங்கள் செவியேற்றோம்; கீழ்ப்படிந்தோம்' என்பதே அவர்களுடைய வாழ்வியல் அணுகுமுறையாக இருந்தது. இதுவே கீழ்ப்படிந்து வாழும் ஆண்களும் பெண்களும் - என்ற பண்பின் உயிரோட்டமான வெளிப்பாடாகும்.

## இறைவனின் கட்டளைகளில் கருணையும் சலுகையும்

அல்லாஹ் கூறுகிறான்: 'உங்களால் முடிந்தவரை அல்லாஹ்வுக்கு அஞ்சிய வண்ணம் வாழுங்கள்' (திருக்குர்ஆன் 64:16)

மேலும், 'அல்லாஹ் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக (பொறுப்புகளைச் சுமத்தி) சிரமப்படுத்துவதில்லை' (திருக்குர்ஆன் 2:286)

அல்லாஹ் மனிதனின் பலத்தையும் பலவீனத்தையும் நன்கறிந்தவன். அதனால்தான் கடமைகளுடன் சலுகைகளையும் வழங்கியிருக்கிறான். நின்று தொழ இயலாதவர் அமர்ந்து தொழலாம்; அமர்ந்து தொழ இயலாதவர் படுத்த நிலையில் தொழலாம்; அதுவும் இயலாத நிலையில் சைகையின் மூலம் தொழலாம். பயணத்திலோ நோயிலோ இருப்பவர் நோன்பை வேறு நாள்களில் நிறைவேற்றலாம். ஜகாத் வசதியுள்ளவர்களின் கடமை. ஹஜ்ஜும் உடல், பொருளாதார வசதியுள்ளவர்களின் மீது கடமை. இதனால் இறைவனின் கட்டளைகள் மனிதனின் இயல்பையும் ஆற்றலையும் கருத்தில் கொண்டே அமைந்துள்ளன என்பதை உணரலாம்.

எனவே தொழுகை, நோன்பு, ஹஜ் ஆகியவற்றில் நாம் காட்டும் கீழ்ப்படிதலைப் போலவே வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து வாழ வேண்டும். 'நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள். அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்..' (திருக்குர்ஆன் 4:59)

## நபிகளார்(ஸல்) மீது அன்பு – பின்பற்றுதலால் நிரூபிக்கப்பட வேண்டும்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள்மீது அன்பு செலுத்துவது ஒரு முஸ்லிமின் ஈமானிய உணர்வின் முக்கியமான வெளிப்பாடாகும். நபிகளார்மீது ஒருமுறை ஸலவாத் கூறுபவர் மீது அல்லாஹ் பத்து முறை அருள் புரிவதாக ஹதீஸ் குறிப்பிடுகிறது. ஆனால் நபிகளார் மீது அன்பு என்பது அவர்களின் புகழைப் பாடுவதிலும் ஸலவாத் கூறுவதிலும் மட்டும் நிற்கக் கூடாது. அவர்களின் வழிமுறையைப் பின்பற்றி வாழ்வதில்தான் அந்த அன்பின் முழுமை வெளிப்பட வேண்டும்.

'(நபியே! மக்களிடம்) நீர் கூறுவீராக: 'நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாய் இருந்தால், என்னைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான். மேலும் உங்களுடைய பாவங்களையும் மன்னிப்பான். அல்லாஹ் மன்னிப்பு வழங்குபவனும் பெருங்கருணையும் உடையவனுமாவான்.' (திருக்குர்ஆன் 3:31)

மேலும்: 'எவன் அல்லாஹ்வுக்கும் அவனு

டைய தூதருக்கும் கீழ்ப்படிகின்றானோ, அவன் மகத்தான வெற்றி அடைந்துவிட்டான்' (திருக்குர்ஆன் 33:71)

### வாய்மை – இறை நம்பிக்கையாளனின் அழியாத அடையாளம்

உண்மை என்பது ஒரு நல்ல பண்பு மட்டுமல்ல; அது ஓர் இறைநம்பிக்கையாளனின் அடையாளமாகும். நபி(ஸல்) அவர்களிடம் ஓர் இறை நம்பிக்கையாளன் கஞ்சனாக இருக்கலாமா, கோழையாக இருக்கலாமா, பொய்யனாக இருக்கலாமா என்று கேட்கப்பட்டபோது, 'ஒருபோதும் பொய்யராக இருக்கக் கூடாது' என்று பதிலளித்தார்கள்.

விளையாட்டிற்காகக்கூட பொய் பேசக் கூடாது. பிறரை ஏமாற்றுவதற்காகவும், கேலி செய்வதற்காகவும் பொய் கூறக் கூடாது. குழந்தைகளிடத்தில்கூட உண்மையைப் பேச வேண்டும் என்பதை நபிகளாரின் வாழ்க்கை நமக்குக் கற்றுத்தருகிறது. வாய்மை நமது நாவில் மட்டும் இருக்க வேண்டியதல்ல; நமது முழு வாழ்க்கையிலும் பிரதிபலிக்க வேண்டிய பண்பாகும்.

### பொறுமை – சோதனைகளில் நிலைத்திருக்கும் வலிமை

பொறுமை என்பது துன்பத்தைத் தாங்கிக் கொள்வது மட்டுமல்ல. சத்தியத்தைத் தேடுவதற்குப் பொறுமை தேவை. சத்தியத்தில் நிலைத்திருப்பதற்குப் பொறுமை தேவை. நன்மையான செயல்களில் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கும் பொறுமை தேவை. தீமைகளைச் செய்யாமல் இருப்பதற்கும் பொறுமை தேவை. துன்பம் வரும்போது மனம் தளராமல் இருப்பதற்கும் பொறுமை தேவை. நன்மையான செயல்களில் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கும் பொறுமை தேவை.

'நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுள்ளவர்களுடன் இருக்கின்றான்.' (திருக்குர்ஆன் 2:153) எனவே, சோதனைகள் நம்மை உடைத்துவிடுவதற்காக அல்ல; நமது இறை நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளாகவும் அமையக்கூடும்.

### குஷூஉ – தொழுகைக்கு உயிரூட்டும் உள்ளச்சம்

பல நேரங்களில் தொழுகையில் நிற்கும் போதுதான் உலகத்தின் எண்ணங்கள் அனைத்தும் நம் நினைவுக்கு வருகின்றன. ஆனால் நாம் யாருடைய முன்னிலையில் நிற்கிறோம் என்ற உணர்வு நம்முள் ஆழமாக வேரூன்ற வேண்டும்.

தொழுகையில் ஓதும் வசனங்களின் பொருளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். தொழுகையில் நாம் ஓதக்கூடிய திருக்குர்ஆன் வசனங்கள், 'சுப்ஹான ரப்பியல் அழீம்', 'சுப்ஹான ரப்பியல் அஃலா', 'ரப்பனா லகல் ஹம்து' போன்ற திக்ருகளின் பொருளை உணர்ந்து ஓதும் போது தொழுகை உள்ளத்துடன் இணைகிறது.

அல்லாஹ்வைப் பார்ப்பதைப் போன்ற உணர்வுடன் அவனை வணங்க வேண்டும்; குறைந்தபட்சம், 'அல்லாஹ் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்' என்ற உணர்வு நம்முள் நிலைத்திருக்க வேண்டும். தொழுகையில் மட்டுமல்ல; எல்லா நிலைகளிலும், எல்லா நேரங்களிலும், நாம் எங்கிருந்தாலும் அல்லாஹ்வின் கண்காணிப்பில் இருக்கிறோம் என்ற உணர்வுடன் வாழ வேண்டும். இதைத்தான் வழிபாடுகள் நமக்குக் கற்றுத்தருகின்றன.

### தர்மம் – செல்வத்தைவிடப் பெரியது கொடுக்கும் மனம்

ஜகாத் என்பது வசதியுள்ளவர்களின் கடமை. ஆனால் சதக்கா அனைவருக்குமான நற்செயலாகும். 'ஒரு பேரீச்சம்பழத்தின் ஒரு துண்டையாவது தர்மம் செய்து நரக நெருப்பிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள். இது பணக்காரர்களைப் பார்த்து சொல்லப்பட்டதல்ல. எல்லோரும் முடிந்த அளவு தர்மம் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த நபிமொழியின் தேட்டம்.

தர்மம் என்பது பணத்தால் மட்டுமே செய்யப்படுவதில்லை. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், 'ஒவ்வொரு நற்செயலும் சதக்காவாகும்'

‘ஒரு சகோதரரைப் பார்த்துப் புன்முறுவல் செய்வதும் தர்மம். நடைபாதையில் கிடக்கும் கல் அல்லது முள்ளை அகற்றுவதும் தர்மம். வழி தெரியாதவருக்கு வழிகாட்டுவதும் தர்மம்’ என்றார்கள் நபிகளார்(ஸல்). எனவே நன்மை செய்வதற்கான வாய்ப்புகள் நம்மைச் சுற்றி நிறைய உள்ளன.

### நோன்பு – தக்வாவுக்கான பயிற்சிக் கூடம்

நோன்பு ரமளான் மாதத்திற்குரிய கடமையாக இருந்தாலும், ரமளான் அல்லாத காலங்களிலும் நஃபில் - விருப்ப நோன்புகளை நோற்பதற்கான வாய்ப்பு உள்ளது. நபி(ஸல்) அவர்கள் நோன்பை பாவங்களில் இருந்து பாதுகாக்கும் ஒரு கேடயம் என்று குறிப்பிட்டார்கள். அது மனிதனைத் தீமைகளிலிருந்து பாதுகாக்கும் பயிற்சியாகவும் அமைகிறது.

நோன்பின் நோக்கம் வெறும் பசியையும் தாகத்தையும் தாங்குவது அல்ல; தக்வாவை - இறையச்சத்தை, இறைவன் நம்மை எல்லா நேரங்களிலும் எல்லா நிலைகளிலும் கண்காணித்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வை வளர்த்துக் கொள்வதே அதன் ஆழமான நோக்கமாகும்.

### கற்பும் ஒழுக்கமும் – இருபாலருக்கும் பொதுவான பொறுப்பு

கற்பு என்றால் பெண்களை மட்டுமே பார்க்கும் சமூகப் பார்வை நிலவுகிறது. ஆனால் கற்பும் ஒழுக்கமும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான பொறுப்பாகும். அதனால்தான் திருக்குர்ஆன் முதலில் ஆண்களிடம் தமது பார்வைகளைக் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்துகிறது.

‘மேலும் விபச்சாரத்தின் அருகில் கூட நெருங்காதீர்கள்! திண்ணமாக, அது மானங்கெட்ட செயலாகவும், மிகத் தீய வழியாகவும் இருக்கிறது’ (திருக்குர்ஆன் 17:32)

இது இறுதித் தவறைத் தவிர்க்குமாறு கூறும் அறிவுரை அல்ல. அதற்கு இட்டுச் செல்லக்கூடிய வழிகளிலிருந்தும் விலகுமாறு எச்சரிக்கிறது.

பார்வை, செவி, நாவு, சிந்தனை, நடத்தை ஆகிய அனைத்திலும் ஒழுக்கத்தைப் பேண வேண்டும். ஆபாசமானவற்றைப் பார்ப்பதும், பேசுவதும், அவற்றை நோக்கிச் செல் லும் செயல்களில் ஈடுபடுவதும் மனிதனைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்லக் கூடும்.

### திக்ர் – தனிமையிலும் இறை உணர்வைத் தக்க வைத்தல்

சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் என்று கூறுவது திக்ரின் ஒரு வடிவமாகும். ஆனால் திக்ரின் தாக்கம் அதைவிடப் பரந்ததாக இருக்க வேண்டும்.

பள்ளிவாசலில் இருக்கும்போது அல்லாஹ்வை நினைவு கூர்வது போலவே, கடைத் தெருவில் வியாபாரம் செய்யும் போதும் அவனை நினைவுகூர வேண்டும். அளவில் மோசடி செய்ய நினைக்கும்போதும் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வு வர வேண்டும்.

உறவுகளைப் பேணும்போதும், வாக்குறுதியைக் காப்பாற்றும்போதும், கடமைகளைச் சரியாக நிறைவேற்றும்போதும் இறை உணர்வு நம்மை வழிநடத்த வேண்டும். தனி அறையில் இருந்தாலும், கதவுகளை அடைத்திருந்தாலும், யாரும் பார்க்காவிட்டாலும், எந்தக் கண்காணிப்புக் கருவியும் இல்லாவிட்டாலும், ‘அல்லாஹ் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்’ என்ற உணர்வு நம்முள் உயிரோடு இருக்க வேண்டும். அதுவே உண்மையான திக்ரின் விளைவு.

அத்துடன் ‘திண்ணமாக, அவர்களுக்காக அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார் செய்து வைத்துள்ளான்’ என்ற இறைவனின் மகத்தான வாக்குறுதியும் நமக்கு உற்சாகமூட்டுகின்றது. இறைவனுடைய மன்னிப்பும், இவ்வுலகிலும் மறுமையிலும் மிகச் சிறந்த, மகத்துவமிக்க, மிக உயர்ந்த பரிசுகளும் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன.

சிறந்த தலைவர் என்பவர் ஒரு குழுவையோ அல்லது நிறுவனத்தையோ அல்லது ஓர் அமைப்பையோ சரியான இலக்கை நோக்கி திறம்பட வழிநடத்தும் தனித்துவமான பண்புகளைப் பெற்றவராக இருப்பார்.

தொலைநோக்குப் பார்வையுடன் எதிர் வருவதை முன்கூட்டியே கணித்து திட்டமிடும் திறம் மிக்கவராகவும், எந்தச் செயலையும் வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும் என்ற உறுதியான தன்னம்பிக்கை உடையவராகவும், அனைவரிடமும் வெளிப்படைத்தன்மை யுடனும் நியாயமாகவும் நடந்து கொள்ளக் கூடியவராகவும் இருப்பார்.

அவசர காலங்களில் சரியான முடிவு களை உடனடியாக எடுக்கக்கூடிய திறன் படைத்தவராகவும், வெற்றியைப் பகிர்ந்து கொள்பவராகவும் தோல்விகள் வந்தால் அதை தன் தோளில் சுமந்து கொள்பவராக வும், மற்றவர்களின் கருத்துகளைக் கேட் பது, தனது எண்ணங்களைத் தெளிவாகப் புரிய வைப்பது போன்ற தொடர்பு திறன் களைக் கொண்டவராகவும் இருப்பார்.

சமகால மாற்றங்களுக்கேற்ப புதிய உத்திகளையும் அணுகுமுறைகளையும் துணையாகக் கொண்டு முடிவுகளை எடுத்து வழி நடத்துபவராகவும் இருப் பார். இவை அனைத்திலும்மேலாக ஒரு தலைவர் என்பவர் தனிநபர் ஒழுக்கம் உள்ளவராகவும், மக்களின் நம்பிக்கை யைப் பெற்றவராகவும் இருப்பது மிக அவசியம். தலைவர்கள் என்றதும் நமது கண்முன் தோன்றும் பிம்பம் எப்படிப்பட்ட தெனில் உயர்தர உடையும், ஐந்து நட்சத் திர உணவகங்களில் உணவும், மாளிகை போன்ற வீடுகளும், பயணிப்பதற்கு குளு குளு வாகனங்களுமாய் ஜொலிப்பவர்கள் தான்.

ஒருவர் ஏதோ ஒரு வகையில் மக்கள் மத்தியில் பிரபலமடைந்து விட் டார் என்பதாலேயே அவரைச் சுற்றியும் ஒரு கூட்டம் கூடுகிறது. அந்தக் கூட் டம் அவரைப் பின்பற்றவும் தயாராகி விடுகிறது. எதைக் கண்டு இந்த மாற்றம் என்ற கேள்விக்கான பதில் நம் யாருக்கும் தெரியாது.

# முன்மாதிரித் தலைவர்
# முஹம்மத்(ஸல்)

**- ஷமீம் ரியாஸ்**

தலைமைத்துவம் என்பதற்கு அகராதி எழுத வேண்டுமானால், இலக்கணம் எழுத வேண்டுமானால், மக்களைச் சீர்திருத்துவது எப்படி என்ற தலைப்பில் ஒரு நூல் எழுத வேண்டுமானால் ஐயமே இல்லை நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையைத்தான் வைக்க வேண்டும். சொல்லும் செயலும் ஒன்றுபட்ட, சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இல்லாத தலைவர் நபி(ஸல்) அவர்கள்.

‘என்னைப் பார்க்காதீர்கள் என்னுடைய புத்தகத்தைப் பாருங்கள்’ என்றார் ஒரு கவிஞர். மிகச் சிறந்த கருத்துகளை என்னால் கூற முடியும். ஆனால் அதன்படி என்னால் வாழ முடியாது என்பதுதான் அதன் பொருள். ஆனால் நபி(ஸல்) என்ற அகிலத்தின் தலைவரிடம் இத்தகைய வேறுபாட்டை அவர்களின் வாழ்க்கை நெடுகிலும் காணவே முடியாது. இனிமேல் இது போன்ற ஒரு தலைவர் வரப்போவதில்லை என்று கூறும் அளவுக்கு அவர்களது தலைமைப் பண்புகள் அமைந்துள்ளன. ஏனெனில் அவர்கள் மக்களுக்குப் போதித்தபடி வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

இந்த உலகில் நாம் பார்க்கும் தலைவர்கள் இரு முகங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள். மக்களின் பார்வையில் இருக்கும் போது ஒரு முகத்தோடும் மற்ற சமயங்களில் இன்னொரு முகத்துடனும் இருப்பர். ஆனால் நபியவர்களின் வாழ்க்கையைப் பொறுத்த வரை குடும்ப வாழ்க்கையாக இருந்தாலும் பொது வாழ்வாக இருந்தாலும் என்றும் ஒரே முகத்துடன் ஒரே பண்புகளுடன் தான் செயல்பட்டார்கள். இத்தகைய தூதரை நமக்கு அறிமுகப்படுத்தும்போது இறைவன் கூறுகிறான்: ‘உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது’ (திருக்குர்ஆன் 33:21)

தனக்கோ தன் சமுதாய மக்களுக்கோ ஏதேனும் பிரச்னைகள் ஏற்பட்டால் அதில் தலையிட்டு அவற்றைத் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையிலும் எதிர்பார்ப்பிலும் தான் மக்கள் தங்களுக்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஒரு தலைவன் சமுதாயப் பணியில் ஈடுபடும்போது புகழ் தேட வேண்டும் என்ற எண்ணத்தில் ஒருபோதும் இருக்கக் கூடாது. மதீனா நகரத்தின் மன்னராக, இஸ்லாமிய சாம்ராஜ்யத்தைத் தன் கையில் வைத்திருந்த நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்குள் நுழைந்த போது, பள்ளிவாசலின் சுவரில் எச்சில் உமிழப்பட்டிருப்பதைப் பார்த்தார்கள். ஒரு சிறு கல்லை எடுத்து அதைச் சுரண்டி வெளியில் ஒதுக்குப்புறமாக வீசினார்கள். மேலும் கூறினார்கள் ‘பள்ளிவாசலில் இவ்வாறு உமிழக்கூடாது. உமிழக்கூடிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டால் இவ்வாறு செய்ய வேண்டும்’ என்று அதற்கான முறையையும் கற்றுக் கொடுத்தார்கள்.

மக்கள் பார்க்க வேண்டும் என்றோ புகழுக்காகவோ அல்லாமல் இறைவன் ஒருவனுக்காக மக்களுக்குத் தொண்டாற்றுபவர்களாக நபி(ஸல்) அவர்கள் இருந்தார்கள். எந்தத் தலைமைத்துவத்திற்கான பண்பு நபி(ஸல்) அவர்களிடம் இல்லை என்று கூற முடியும்?.

ஒருமுறை நபியவர்கள் ஒரு திருமண வீட்டிற்குச் சென்ற போது அங்குள்ள சிறுமிகள் ‘எங்களிடம் ஒரு நபி உள்ளார். அவர் நாளை நடப்பதை அறிவார்’ என்று நபியைப் புகழ்ந்து பாடினார்கள். அதைக்கேட்ட நபி (ஸல்) அவர்கள் ‘அவ்வாறு கூறாதீர்கள் அத்தகைய வல்லமையும் தகுதியும் இறைவன் ஒருவனுக்கே அன்றி எனக்கில்லை’ என்று கூறி மக்களிடம் தம்மைக் குறித்த தவறான கருத்தை நீக்கினார்கள்.

அகிலத்தின் மிகச்சிறந்த தலைவராகிய நபி(ஸல்) அவர்கள், தமது தோழர்களிடமும் மக்களிடமும் மிக எளிமையாகப் பழகினார்கள். தான் வரும்போது யாரும் எழுந்து நிற்கக்கூடாது, தன்னை ஒரு சபையில் தனித்துவமாகக் காட்டக்கூடிய இருக்கைகள் எதுவும் இருக்கக் கூடாது என்றும் கூறி அதை செயல்படுத்தினார்கள். அடிமைகளுடன் ஒரே தட்டில் உணவருந்துவதும் ஏழை, எளியவர்களின் விருந்தழைப்பை ஏற்றுக்

**தலைமைத்துவம் என்பதற்கு அகராதி எழுத வேண்டுமானால், இலக்கணம் எழுத வேண்டுமானால், மக்களைச் சீர்திருத்துவது எப்படி என்ற தலைப்பில் ஒரு நூல் எழுத வேண்டுமானால் ஐயமே இல்லை நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையைத் தான் வைக்க வேண்டும். சொல்லும் செயலும் ஒன்றுபட்ட, சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இல்லாத தலைவர் நபி(ஸல்) அவர்கள்.**

கொள்வதும் சமத்துவத்தையும் சகோதரத் துவத்தையும் போதித்த சாந்த நபி அவர்களின் வழக்கமாக இருந்தது.

ஜார்ஜ் பெர்னாட்ஷா கூறுகிறார்; 'முஹம்மது(ஸல்) அவர்களைப் போன்ற ஒரு தலைவர் நவீன உலகின் ஆட்சியைப் பிடித்தால் உலகின் தற்போதைய பிரச்னைகள் அனைத்தையும் தீர்த்து அமைதியையும் மகிழ்ச்சியையும் கொண்டு வருவார். அவர் நவீன உலகிற்குச் சிறந்த வழிகாட்டி.

நபி(ஸல்) அவர்கள் இறைத்தூதை மக்களி டம் எடுத்துரைத்ததோடு மட்டுமல்லாமல் நாக ரிகத்திலும் ஒழுக்கத்திலும் மிகவும் தாழ்ந்த நிலையில் வாழ்ந்தவர்களைத் தங்களது கடும் உழைப்பினாலும் உயர்ந்த குணங்களி னாலும் அவர்களை, உலகிற்கே நாகரிகத் தையும் நல்லொழுக்கத்தையும் கற்றுக் கொடுக்கும் உயர்ந்த தோழர்களாக குறுகிய காலத்திலேயே உருவாக்கினார்கள். எந்தத் தலைவரும் தனக்குப் பின் தன் தொண்டர் களைப் பின்பற்றுங்கள் என்று கூறிய வரலாறு கிடையாது. 'எனது தோழர்கள் விண்ணில் மின்னும் நட்சத்திரங்கள் அவர்களைப் பின்பற்றினால் நேர்வழி பெறுவீர்கள்' என்று நபியவர்கள் கூறினார்கள்.

உலகில் தலைவராய் இருந்தவர்கள் தனித்தன்மையோடு வாழ்வதைத் தான் விரும்புவார்கள். தனது வேலைகளை எல்லாம் சாமர்த்தியமாக தொண்டர்களிடம் வாங்கிக் கொள்வார்கள். ஆனால் நபியவர் களின் தோழர்கள் அவர்களுக்குக் கொடுத்த கண்ணியத்தைப் போன்று உலகில் எந்தத் தலைவருக்கும் அவர்களது தொண்டர்கள் கண்ணியம் கொடுத்ததில்லை. தனக்காக உடல் உயிர் பொருள் அனைத்தையும் அர்ப் பணிக்கும் தொண்டர்கள் இருந்தும் கூட நபி(ஸல்) அவர்கள் எல்லா வேலைகளிலும் தொண்டர்களோடு தோளோடு தோள் நின்று வேலைகளில் பங்கு பெறுவார்கள்.

உலகத் தலைவர்களின் மாபெரும் ஆளு மைப் பண்புக்குரியவர்களாக விளங்கும் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்வில் அன் னாரின் நற்பண்பு, அறிவாற்றல், பொறுப்பு உணர்வு, தியாக மனப்பான்மை, அனுச ரணை, பொறுமை, மன்னிப்பு, நேர்மை, சகோதரத்துவம், கருணை, பணிவு என்று வாழ்வின் அனைத்துக் கூறுகளின் பிரதிபலிப் புகளும் மனிதகுலத்திற்கு வழிகாட்டக் கூடிய தாகவே அமைந்திருக்கும். வழிகாட்டுவதோடு மட்டுமல்லாமல் வாழ்வின் எல்லாத் துறை களிலும் ஏற்படும் பிரச்னைகளுக்கான சிறந்த தீர்வுகளையும் தரக்கூடியவையாக இருக்கும்.

14 நூற்றாண்டுகளுக்கு முன்பு மட்டுமல்ல இன்றைய நவீன காலச் சமூகத்தில் உள்ள அனைத்து விதமான பிரச்னைகளுக்கும் தீர்வு நபி(ஸல்) அவர்களின் வாழ்வில் தான் உள்ளது. தொழில்நுட்பம் உயரலாம். வாழ்க்கை முறை மாறலாம். சமூகத்தின் பிரச்னைகள் புதிய வடிவங்களைப் பெறலாம். ஆனால் அன்பு, நேர்மை, கருணை, பொறுமை, மன்னிப்பு, பணிவு, நம்பகத்தன்மை போன்ற உயர் பண்பு களின் தேவை ஒருபோதும் மாறாது.

நபி(ஸல்) அவர்கள் காட்டித்தந்த பண்பு களை மனதிலே நிறுத்தி ஒரு சமுதாயத் தலைவர் செயல்பட்டார் எனில் அந்தச் சமுதாயம் நிச்சயமாக ஒரு மேம்பட்ட சமுதாய மாக மாறும் என்பதில் ஐயமில்லை. ஒரு சிறந்த தலைவர் என்பவர் வழிகாட்டியாக இருப்பாரே தவிர முகம் காட்டியாக இருக்க மாட்டார்.

# இஞ்சி



**டாக்டர் P.A. முஹம்மது இக்பால்** MD Siddha
**பேராசிரியர், பணி நிறைவு**
**அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, பாளையங்கோட்டை**

**‘சுவனத்தின் நிழல்கள் அவர்களின் மீது தாழ்ந்திருக்கும். மேலும், அதன் கனிகள் எப்போதும் (அவர்கள் விரும்பிய படி பறித்துக் கொள்ளும் அளவில்) அவர்களின் அருகில் இருக்கும். வெள்ளிப் பாத்திரங்களும் கண்ணாடிக் குவளைகளும் அவர்களுக்கு முன்னிலையில் சுற்றிச் சுற்றி வருமாறு செய்யப்பட்டிருக்கும். அந்தக் கண்ணாடிகளும் வெள்ளி வகையைச் சேர்ந்ததாக இருக்கும். அவற்றைச் (சுவனத்தின் ஊழியர்கள்) சரியான அளவில் நிரப்பியிருப்பார்கள். அந்தக் கிண்ணங்களில் இருந்து இஞ்சிச்சுவை கலந்திருக்கும் பானங்கள் அவர்களுக்கு அங்கு குடிப்பதற்கு வழங்கப்படும்.’ (திருக்குர்ஆன்** 76:14-17)

**சுவனத்தில் நல்லடியார்களுக்குக் கிடைக்கும் வெகுமதியை திருமறை விவரிக்கும் போது அவர்களுக்கு இஞ்சிச் சுவை கலந்த பானம் வழங்கப்படுவதாகக் கூறுகிறது.**

உலகின் பல பகுதிகளில் வாழும் மக்கள் தங்களது அன்றாட உணவில் இஞ்சியைப் பயன்படுத்துகின்றனர். ஆயுஷ் இந்திய முறை மருத்துவத்தில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி மருத்துவத்தில் இஞ்சி பயன்படுத்தப்படுகின்றது. சமையல் பொருள்களில் இஞ்சி முக்கியப் பங்கு வகிக்கின்றது.

இஞ்சி ஓராண்டுப் பயிராகும். செழிப்பான வண்டல் மண் பகுதிகளில் பயிரிடப்படுகின்றது. தமிழ்நாட்டில் பல பகுதிகளில் பயிரிடப்படுகின்றது. கன்னியாகுமரி, பழனியில் அதிகமாகப் பயிரிடப்படுகின்றது. பயிருடைய இலைகள் மஞ்சள் நிறத்தை அடைந்தால் நன்றாக இஞ்சி வளர்ச்சியடைந்து விட்டது எனக் கணிப்பர். அறுவடை செய்வர். உலகளவில் இஞ்சி விளைச்சலில் இந்தியா முதலிடம் வகிக்கின்றது. உலகில் தாய்லாந்து, நைஜீரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் இஞ்சி அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. உலக மக்கள் பலரும் இஞ்சியைப் பயன்படுத்துகின்றனர்.

இந்தியாவில் கேரளா, தமிழ்நாடு, அஸ்ஸாம், பீகார், மத்தியப்பிரதேசம், உத்திரப் பிரதேசம் பகுதிகளில் இஞ்சி பயிரிடப்படுகின்றது. உலகின் குறிப்பிட்ட சில பகுதிகளில் இஞ்சி பயிரிடப்படுகின்றது. செழிப்பான வண்டல் மண் பூமியில் இஞ்சி பயிரிடப்படுகின்றது. இதன் வேர்ப்பகுதியிலுள்ள கிழங்கை (Rihzome) மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

ஆங்கில முறை மருத்துவத்தில் இஞ்சி பயனில் உள்ளது. வேர்ப்பகுதியிலிருக்கும் கிழங்கை எடுத்து சுத்தம் செய்து பயன்படுத்துகின்றனர். இதனை Zinger Officinali (ஜிஞ்சர் அபிஸினாலி) என ஆங்கிலத்தில் அழைப்பர். மலையாளத்தில் இஞ்சி என்றும், ஹிந்தியில் அத்ரக் என்றும் அழைப்பர். இஞ்சி Zingi beracac என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது.

இஞ்சி வெளிறிய காக்கி நிறத்தில் தடித்து, சற்று சுரசுரப்புடன், நீளவாக்கில் சற்று பளபளப்பாக இருக்கும். நீர்த்துவம் கொண்டது. அளவுக்கு அதிகமாக நீர்த்துவம் இருந்தால் காளான் Fungus பற்றிக் கொள்ளும். ஆகவே வாங்கும் போது கவனத்துடன் தரமானதாக இருக்கிறதா என்பதைக் கவனித்து வாங்க வேண்டும். இஞ்சியைப் பயன்படுத்தும் முன் தோலை சீவிக் கொள்ள வேண்டும்.

உலர்ந்த இஞ்சியை(Epidermis) சுக்கு(Dried forms) என்பர். இதில் நீர்த்துவம் இராது. அதிக எடை இராது. பல நாள்களுக்குக் கேடு அடையாமல் இருக்கும். நுண்கிருமிகள் தாக்குதலுக்கு உட்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கடினமாக இருக்கும். இலகுவில் உடையாது. இஞ்சி, சுக்கு இரண்டுமே காலை மாலையில் இஞ்சி டீயாகவும், சுக்குக் காப்பியாகவும் பலரும் உலகின் பல பாகங்களிலும் பயன்படுத்தி வருகின்றனர். இது சோம்பலை நீக்கி உற்சாகத்தை ஊட்டும். இதில் சீனி கலந்திருப்பதால் உடலுக்குத் தேவையான குளுக்கோஸ் கிடைக்கும். ஆகவே உடல் சோர்வை போக்கும். நரம்பு மண்டலத்தைத் தூண்டும்.

இஞ்சிச் சாற்றையோ, அரைத்த இஞ்சிக் கூழையோ புறச்சூழலில் 4 முதல் 5 மணி நேரத்திற்கு மேல் வைத்திருக்கக் கூடாது. அப்படி வைத்திருந்தால் வேதியல் மாற்றமடைந்து கேடடைந்து விடும். இதுபோன்ற நிலைகளில் குளிர்சாதனப் பெட்டியில் பாதுகாப்பாக வைத்திருந்தால் கேடு அடையாமல் இருக்கும்.

இஞ்சியை தோல் நீக்காமல் அப்படியே புறச்சூழலில் 5 முதல் 10 நாள்களுக்கு வைத்திருக்க முடியும். கேடு அடையாது. அதிலுள்ள நீர்த்துவம் குறைந்து, கடினமடைந்து, உலர்ந்து சுக்காகி விடும். சுக்கினையும் மருத்துவத்தில் மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர்.

இஞ்சியை வாயில் இட்டுச் சுவைத்தால் காரமாக இருக்கும். வாயில் உள்ள உமிழ்நீர்க் கோளங்கள் தூண்டப்பட்டு உமிழ்நீர் சுரக்கும் (Salivary Glands) பரோடிட், மேக்ஸிலர், சப்லிங்குவல் (பரோடிட், தாடையடி, நாக்கின் கீழ்) பகுதியிலுள்ள உமிழ்நீர் கோளங்கள் தூண்டப்பட்டு, உமிழ்நீர் சுரக்கும்(Oral Cavity). வாயிலிட்ட உணவை நன்றாக மென்று விழுங்குவதற்கும், உணவு செரிப்பதற்கும் உதவுகின்றது.

இரைப்பைப் புண், முன்சிறுகுடல் புண் உள்ளவர்கள்(Gastric and Dudinal Ulcer) இஞ்சியைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டும். இல்லையேல் இரைப்பையில் எரிச்சல், வலி, வாந்தி ஏற்படும்.

உமிழ்நீரானது வாயில், உணவுடன் உட்புகுந்த நுண்கிருமிகளைக் கொல்லும் ஆற்றலுடையது.

## இஞ்சித் துவையல் செய்யும் முறை

**இஞ்சி** - 150 கிராம்
**நல்லெண்ணெய்** - 150 கிராம் (160 மி.லி)
**தேங்காய் திருகல்** - 3 டீஸ்பூன்
**மிளகாய் வற்றல்** - 12 - 15 எண்ணிக்கை
**புளி** (எலுமிச்சங்காய் அளவு) - 15 கிராம்
**வெல்லம்** - ஒரு டீஸ்பூன்
**கடுகு** - சிறிதளவு



இஞ்சியைத் தோல் நீக்கி சிறு சிறு துண்டுகளாக வெட்டவும். சட்டியில் நல்லெண்ணெய் ஊற்றி அடுப்பேற்றி, அதில் நறுக்கிய இஞ்சித் துண்டுகளைப் போட்டு கரண்டியால் வதக்கவும். அதில் மிளகாய் வற்றலை சிறுசிறு துண்டாகச் சிதைத்து, பொடித்து சட்டியிலிட்டு வதக்கவும்.

தேங்காய்திருகலைநன்றாகஅரைத்து வேறு சட்டியில் நன்றாக வதக்கி அதில் போடவும். சிறிதளவு கடுகை அதில் இடவும். நன்றாகக் கிளறி விடவும். அதன்பின் கரைத்த புளிச்சாற்றினை வடிகட்டி சேர்த்துக் கொதிக்க வைக்கவும். நன்றாகக் கொதித்தவுடன் வெல்லம் கலக்கவும். அடுப்பிலிருக்கும் போது நீர்த்துவம் முற்றிலும் நீங்கிய பின் பதத்தில் இறக்கவும். குடுவையில் பதப்படுத்தவும். சுத்தமான ஈரமில்லாத கரண்டியில் எடுத்து உணவுடன் துவையலாகப் பயன்படுத்தவும்.

ஊறுகாயை விட மிகுந்த சுவையுடன் இருக்கும். இத்துவையலில் அறுசுவையும் கலந்திருக்கும். கேடு அடையாமல் பல நாள்கள் பயன்படுத்த முடியும். தேவைப்பட்டால் வெயிலில் வைத்து எடுத்துக் கொள்ளலாம். இதனால் அதிலுள்ள நீர்த்துவம் குறையும். காளான் பிடிக்க வாய்ப்பிருக்காது.

உண்ட உணவை ஈரப்பதமாக்கி, பற்களால் நன்றாகக் கூழாக அரைத்து விழுங்க உதவு கின்றது. வறண்ட உணவு (கொழுக்கட்டை, மாவுப் பண்டம், ரவை, இடியாப்பம், புரோட்டா) போன்ற உணவுகளை மென்று தின்பதற்கு முக்கியப் பங்கு வகிக்கின்றது.

இஞ்சி, சுக்கு, மருத்துவப் பயன் குறித்து சித்த மருத்துவ நூல்களில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இஞ்சிக் கிழங்குக்கு இருமல் ஐயம் - ஒக்காளம்
வஞ்சிக்கும் சன்னி சுரம் வன்பேதி - விஞ்சுகின்ற
சூலை அனும் வாதம்போம் தூண்டும் தீபனமாம்
வேலை யொத்த கண்ணாய் விளம்பு
(அகஸ்தியர் குணவாகடம்)

சித்த மருத்துவ நூல்களில் இஞ்சியின் குணம், பயன், நோய் தீர்க்கும் குறியீடுகள், மருந்து செயல்முறைகளைப் பல சித்தர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேற்கோளுக்காக ஒரு எடுத்துக்காட்டு மட்டும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இருமல், சுரம், வாந்தி, விட்டு விட்டு வரும் சுரம், சன்னி (Hyper Phrexia) செரியாமை, பசி மந்தம், உப்பிசம் (Loss of Appetite) நீக்கும், மிகு பசியினை ஏற்படுத்தும்.

இஞ்சியைச் சாறெடுத்தும், அரைத்து துவையலாகவும் (Paste) பயன்படுத்துகின்ற னர். சுக்கினை மேல் தோல் நீக்கி, உடைத்து பொடியாக்கி சுக்குத் தூளாகவும், கூட்டு மருந்துகள் சேர்த்தும் பயன்படுத்துகின்றனர். Siddha Pharmcology மருந்து தயாரிப்பு புத்தகத்தில் இது குறித்து கூறப்பட்டுள்ளது.

### இஞ்சி தேனூறுதல்

இஞ்சியைத் தோல் நீக்கி சிறு சிறு துண்டு களாக நறுக்கி, தேனில் ஊற வைத்து தினமும் 10 நாள்கள் வெயிலில் வைத்து எடுக்க வேண்டும். நீர்மத் தன்மை முற்றிலும் நீங்கிய பின் ஒரு தேக்கரண்டி வீதம் உணவுக்குப் பின் காலை, மாலை பயன்படுத்த உடல் சீராக இயங்கும். உணவு நன்றாக செரிமானமாகும். உடலுக்குத் தேவையான குளுக்கோஸ் ஊட்டச் சத்து கிடைக்கும்.

### இஞ்சி முரப்பா



இஞ்சிச் சாற்றுடன் சர்க்கரை சேர்த்து, அடுப்பில் விட்டுக் காய்ச்சி நீர்த்துவம் முற்றிலும் நீங்கிய பின் தட்டில் அல்லது அச்சுத் தட்டில் ஊற்றி வைக்க வேண்டும். அது நன்றாக இறுகி விடும். பின் கத்தியால் சிறு சிறு வில்லைகளாகப் பிரித்தெடுத்து இஞ்சி முரப்பா வீட்டில் இலகுவாகத் தயாரிக்க முடியும். கடை களில் விற்பனை செய்தும் வருகின்றனர். காலை, மாலை ஒரு துண்டு சாப்பிட்டு வந்தால் உண்ட உணவு எளிதில் செரித்துவிடும். பசி மந்தம் நீங்கி விடும். உடல் வலுப்பெறும்.

இஞ்சி முரப்பாவை பெரியவர் முதல் சிறுவர்கள் வரை மிட்டாய் போல் பயன் படுத்துகின்றனர். இதில் சர்க்கரை சேர்ப்பதால், காரமான சுவை குறைந்து இனிப்பாக இருக்கும். உடலுக்குத் தேவையான குளுக்கோஸ், ஆற்றல் கிடைக்கும்(Calory Energy). இஞ்சி முரப்பா பயன்படுத்தும் முறை தலை தலைமுறையாக நம்மிடையே இருந்து வருகின்றது.

திரிகடுகு என்ற மருந்து தயாரிப்பு சூரணத்தில் சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் சம அளவு சேர்த்து நன்றாகப் பொடி செய்து திரிகடுகுச் சூரணம் என மருத்துவத்தில் பயன்படுத்துவர். இதனை ஒரு தேக்கரண்டி வீதம் காலை மாலை உணவுக்குப் பின், தேனு டன் உட்கொள்ள உடல் வளமும் நலமும் பெறும். செரிமானம் ஏற்படும். முன் கூறப் பட்ட மூன்று மருந்துப் பொருள்களும் உடல் தாதுக்களை வலுப்படுத்தும். உட லுக்கு ஆதார மாக விளங்கும். நாடித் துடிப்பை முறைப் படுத்தும். இதய நடையை முறைப்படுத்தும்.

உண்ட உணவு நன்றாகச் செரித்தல், குடலு றிஞ்சிகளால் உடலுக்குத் தேவைப்படும் ஊட் டச்சத்துகள் கிடைக்கும். நோய் தாக்காமல் நலவாழ்வு வாழ முடியும்(Preventive Aspect). முன்னோர்கள் கூறிய மருத்துவ முறைகளைத் தினமும் கடைப்பிடித்து நல வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனின் உதவி கிடைக்கும்.

● ஆரூர் புதியவன்




# கொள்கைக்கு ஒரு புத்தாடை

நாவைப் பொசுக்கிய
தேநீர்
சில மணித்துளிகளுக்குப் பின்
கோப்பைக்குள்
குந்தி இருந்தது வெட்கத்தால்
தலை மீது
ஒரு துண்டைப் போர்த்திக் கொண்டு

‘சுட்டுப் பொசுக்கிய
உன் தன்மையை
விட்டுத் தொலைத்து விட்டாயா?’
என்றேன்

கோப்பைத் தேநீர்
குன்றிய குரலில்
சொன்னது
இது காலம் செய்த ஜாலம்

ஆவி பறக்கும்
சூட்டில் இருந்தேன்
சுரணை மிகுந்தேன்
கொள்கையே என் ஆவி
என்று கொடியேற்றினேன்
உரையாற்றினேன்

குடித்தலைவர் ஒருவர் அலட்சியமாய்
என்னை எடுத்து
பருக முயன்ற போது
அவரது
உதட்டில் சூடு வைத்தேன்
நாவை வேக வைத்தேன்
என் கொள்கைச் சூட்டை
உணர்த்தினேன்

அவரோ
குளிர்மையூட்டிய
ஓர் அறையில்
காற்றாடியின் கீழே
என்னை வைத்துவிட்டார்

குளிர்ந்த அறையின்
சுகத்தில்
காற்று தழுவிய வேகத்தில்
என் கொள்கை
தொலைந்து போனது

ஆவி பறந்த
என் மீது
படர்ந்து இருக்கிறதே
இந்த ஆடை
இது சவக்கோடியோ
என் கொள்கைக்கு..!



# மாற்றத்தின் பூங்காற்று

T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

**வட இந்தியாவிலிருந்து இப்போதெல்லாம் மகிழ்ச்சியான செய்திகள் வரத் தொடங்கியுள்ளன. வட புலத்து அரசியல் தட்பவெப்பமே மாறிக் கொண்டிருக்க அதன் பிரதிபலிப்பை சமூகம், கல்வி, சந்தை என எல்லாத் தளங்களிலும் காண முடிகின்றது. கடந்த பத்து, பன்னிரு ஆண்டுகளாக சூழலை சூடு பிடித்து வந்த முழக்கங்கள் அனைத்தும் வலு இழந்துவிட்டன. மக்கள் விழிப்படைந்து உள்ளார்கள். ஜென் ஸீ, ஜென் ஆல்ஃபா தலை முறையினர் மத்தியில் கிளம்பிய எதிர்க் குரல் இப்போது எல்லா அரங்குகளிலும் எதிரொலிக்கத் தொடங்கி இருக்கின்றது.**

ஜந்தர் மந்தரில் நடந்த மகத்தான மாணவர் போராட்டத்தின் போது மிக அதிகமான மன எழுச்சியோடு முழங்கப்பட்ட முழக்கம், 'ஜப் ஜப் மோடி டர்தா ஹே இந்து முஸ்லிம் கர்தா ஹே - 'மோடி பீதியடைகின்ற போதெல்லாம் இந்து - முஸ்லிம் பிரச்னையைக் கையில் எடுப்பார்' என்கிற அதிரடி முழக்கம்தான். இது மோடி என்கிற ஊதிப் பெரிதாக்கப்பட்ட பலூனை உடைக்கின்ற கூர்மையான முழக்கமாயிற்று.

ராகுல் காந்தியின் முன்னெடுப்புகளும் கூர்மையாகி இருக்கின்றன. ஆட்சியில் இருக்கின்ற ஆளுமைகளை கோழைகள், கோமாளிகள் என்றெல்லாம் சூடு பறக்கப் பேசுகின்ற ஆளுமையாய் ராகுல் புது அவதாரம் எடுத்திருக்கின்றார்.

அமித் ஷாவின் ராஜினாமாவை மையப்படுத்தி அவர் அடுத்தடுத்து மேற்கொண்ட அரசியல் நகர்வுகள் ஆளும் தரப்பை அதிரச் செய்திருக்கின்றன என்பதுதான் உண்மை. பிரதமரும் உள்துறை அமைச்சரும் மக்களவைக்கு வராமல் ஒதுங்கியதை ஒட்டுமொத்த இந்தியாவே மலைப்போடு பார்த்தது. நாடுமுழுவதும் விடுதலை தின உரையின் போதும் இதன் தாக்கத்தை வெளிப்படையாகப் பார்க்க முடிந்தது.

இவையெல்லாமே அரசியல் களத்தில் நடக்கின்ற சங்கதிகள். இவை எங்கு போய் முடியும் என்பதை அத்துணை எளிதாகக் கணித்துவிட முடியாது. அதே சமயம் சமூகத் தளத்திலும் காத்திரமான மாற்றங்கள் நிகழ்ந்து

வருவது கவனிக்கத்தக்கது. இந்த மாற்றத்தின் வீச்சும் பரப்பும் கனமும் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகின்றது. ஜந்தர் மந்தரில் திரண்ட ஜென்ஸீ இளவல்களில் பெரும்பாலோர் பாஜக உள்ளிட்ட வலதுசாரி சிந்தனை மரபைக் கொண்டவர்களின் பிள்ளைகளாக இருந்ததே சான்று.

இந்தச் சூழலில் தலைநகரத்திலிருந்து ஓர் மகிழ்ச்சியான செய்தி வந்துள்ளது. அமைதி, நல்லிணக்கத்துக்கான தேசிய மகளிர் பேரவை National Women Forum For Peace and Harmony NWFPH உதயமாகியிருக்கின்றது.

அனைவரையும் அரவணைத்துச் செல்கின்ற அரசியல் தலைமை, சகலமானவருக்குமான நீதி ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டைக் கட்டியெழுப்புகின்ற அறப்பணியில் முழுமையாக ஈடுபடுவதை இலக்காகக் கொண்டு இந்த மகளிர் பேரவை தொடங்கப்பட்டிருக்கின்றது.

2026 ஆகஸ்ட் 19 அன்று புது தில்லியில் உள்ள தெற்காசியாவின் அயலக நிருபர்கள் மன்றத்தில் இந்தப் பேரவையின் தொடக்க விழா நடைபெற்றது. சமூக, அரசியல், மக்கள் சேவை, பொருளாதாரம், கல்வி, ஊடகம், அரசு சாரா அமைப்பு என வெவ்வேறு தளங்களில் மும்முரமாக இயங்கி வருகின்ற ஆளுமைமிக்க தலைவர்கள், அறிஞர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், ஊடக வல்லுநர்கள் இந்தப் பேரவைக்காக ஒருங்கிணைந்துள்ளனர்.


டாக்டர் ரூப் ரேகா வர்மா

தொடக்க விழாவில், லக்னௌ பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், மூத்த சமூக ஆர்வலரும், புகழ்பெற்ற கல்வியாளருமான டாக்டர் ரூப் ரேகா வர்மா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

மூத்த பத்திரிகையாளர் செல்வி பாஷா சிங், புதுதில்லி YMCA INSIT இயக்குநர் செல்வி பார்தி நாக்பால், தலித் அர்த்திக் அதிகார் அந்தோலன்(DAAA) பொதுச் செயலாளர் செல்வி பீனா ஜே. பல்லிக்கல் ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றார்கள்.

இந்தப் பேரவையின் இலட்சினை ஆயிரம் செய்திகளை அழுத்தமாகச் சொல்வதாக உள்ளது. புறா ஒன்றை பெண்களின் கைகள் விடுவிப்பதைச் சித்திரிப்பதாக உள்ள இந்த இலட்சினை பெண்களை அமைதி, நல்லிணக்கத் தூதர்களாய் உணர்த்துகின்றது என்றும், அமைதியும் இணக்கமும் நிறைந்த சமூகச் சூழல்தான் உயர, உயரப் பறப்பதற்கு உதவுவதற்கான கூட்டு விருப்பத்தை உணர்த்துகின்றது என்று ராபியா பஸ்ரி இலட்சினை தருகின்ற செய்தியை விவரித்துக் கொண்டே போகின்றார்.

காந்தியக் கொள்கைகளின் மூலமாக அமைதியையும் நல்லிணக்கத்தையும் நிலைநிறுத்த வேண்டிய அவசியத்தை இந்தப் பேரவையின் தலைவி ஜகிரதி அறிவுறுத்தி இருக்கின்றார். சமுதாயங்களுக்கிடையிலான இடைவெளியைக் குறைப்பதையே இந்தப் பேரவை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று பேரவையின் துணைத் தலைவர் சகோதரி ரஹ்மத்துன்னிசா அறிவித்துள்ளார். இன்றையக் காலத்தில் பெண்களையும் சமூகங்களையும் இன்னும் சொல்லப் போனால் ஒட்டுமொத்த மனித குலத்தைப் பாதிக்கும் சிக்கல்களுக்கு நடைமுறைத் தீர்வுகளை உருவாக்கி, அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை வார்த்தெடுப்பதில் பெண்களின் பங்களிப்பும் பங்கேற்பும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். பிரச்னைகளுக்காகக் குரல் கொடுப்பதோடு நின்றுவிடாமல் அவற்றுக்கு அர்த்தமுள்ள தீர்வைத் தருவதற்கும் தொலை நோக்குடன் இயங்கி சமூக மாற்றத்தை உருவாக்குவதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த இனிய நிகழ்வில் விழா நாயகராகப் பங்கேற்ற லக்னௌ பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ரூப் ரேகா வர்மா

புதிதாக உருவாக்கப்பட்ட இந்தப் பேரவையை அனைவரையும் உள்ளடக்கியதாக, எல்லோரையும் பிரதிநிதிப்படுத்துவதாக இருப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார். பாலினம், சமூகம், வர்க்கம் என எந்தவொரு பகுப்புக்கும் இடம் தராமல் எல்லாத் தரப்பினரையும் அரவணைத்து இயங்குகின்ற, பன்முகத்தன்மை கொண்ட தளமாக இந்தப் பேரவை முத்திரை பதிக்க வேண்டும் என்றும் டாக்டர் வர்மா அறிவுறுத்தினார்.



NWFPH அமைதி, நல்லிணக்கத்துக்கான தேசிய மகளிர் பேரவையின் பொறுப்பாளர்கள் (இடமிருந்து) அபிராமி ஜோதீஸ்வரன், செயலாளர் ஜாகிரதி ராஹி, தலைவர் ஏ.ரஹ்மத்துன்னிஸா, துணைத் தலைவர் ராபியா பஸ்ரி

மூத்த பத்திரிகையாளரும் சிந்தனையாளருமான செல்வி பாஷா சிங், அமைதிக்காகவும் நல்லிணக்கத்துக்காகவும் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டிய தற்போதைய காலகட்டத்தில், இந்த மாண்புகளுக்கு எதிராகச் செயல்படும் சக்திகளை அடையாளம் காண்பதும் சம முக்கியத்துவம் வாய்ந்தது என்றார். அனைவரையும் உள்ளடக்கிய, ஜனநாயக சமுதாயத்தின் மாண்புளைப் பாதுகாப்பதில் சுதந்திரமான குரல்கள், பத்திரிகைக் கூட்டு சமூக நடவடிக்கை ஆகியவற்றின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

தலித் அர்த்திக் அதிகார் அந்தோலனின் பொதுச் செயலாளர் செல்வி பீனா ஜே. பல்லிக்கல், அரசியலிலும், நிறுவனங்களிலும் அதிகாரப் பதவிகளிலும் தலித் தலைமையையும் பிரதிநிதித்துவத்தையும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். உண்மையிலேயே அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு சமூக மனப்பான்மைகளை மாற்றுவதும், பன்முகத் தலைமையை ஏற்றுக்கொள்வதும் மிக மிக அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

தில்லி பல்கலைக்கழகத்தின் AISA செயலாளரான செல்வி அஞ்சலி, நாட்டைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்களிப்பும் மாணவர்களின் பங்கேற்பும் இன்றியமையாதவை என்று கூறினார். தேசிய உரையாடலில் இளைஞர்களுக்கு அதிக இடம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

கல்வியாளரும், தில்லி பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரும், NWFPH செயற்குழு உறுப்பினருமான பேராசிரியர் நந்திதா நரேன், நாட்டைக் கட்டியெழுப்புவதில் கல்வியின், குறிப்பாக தொடக்கக் கல்வியின் பங்கு காத்திரமானது என்றார்.

தெற்காசிய ஒருங்கிணைந்த செய்தி வலையமைப்பின் ஆசிரியரும், பேரவையின் ஊடக ஆலோசகருமான திருமதி. பின்னி யாதவ், அமைதி, நல்லிணக்கம், நீதி, நாட்டைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றுக்கான பொதுவான அர்ப்பணிப்புடன் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெண்கள் ஒன்றிணைவது அவசியம் என்றார்.

அரசியல், கல்வி, வீதிப் போராட்டம் போன்ற களங்களில் எதிரொலித்து வந்த மாற்றத்துக்கான குரல் இப்போது சமூகத் தளங்களிலும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.




● மு.நசீஹா பர்வீன் முபல்லிகா

# எழுந்திரு!

'என்னால் முடியாது' என்ற வார்த்தையை நாம் ஒவ்வொருவரும் எத்தனை முறை சொல்லி இருக்கின்றோம்? காலையில் எழும் போது ஒரு புதிய கனவோடு எழுகிறோம். ஆனால் இரவு தூங்கும் போது மனதில் ஏதோ ஒரு கவலை வந்து குடியேறி விடுகிறது. 'நாளை பார்த்துக் கொள்ளலாம்' என்று நமது இலக்குகளைத் தள்ளிப்போட்டுத் தள்ளிப்போட்டு, இறுதியில் அந்த உன்னதமான கனவே நம்மை விட்டுத் தொலைந்து போய்விடுகிறது.

தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்தாலும் 'போதும்.. இதுக்கு மேல் என்னால் முடியாது' என்று மனமுடைந்து முட்டி போட்டு உட்கார்ந்து விடக்கூடாது. முயன்றால் நமக்குள் ஒரு குரல் கேட்கும். அது வெளியில் இருந்து வரும் குரல் அல்ல; நம் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து ஒலிக்கும் குரல்! 'எழுந்திரு.. இன்னும் ஒரே ஒரு முறை முயற்சி செய்து பார்' என்று! அது நமக்குள் உத்வேகத்தை விதைக்கும். முயற்சி என்பது எடுத்தவுடனேயே வெல்வது அல்ல; விழுந்தாலும் மீண்டும் மீண்டும் எழுந்திருப்பது தான்.

அல்லாஹ் கூறுகிறான்: 'நிச்சயமாக மனிதனுக்கு அவன் முயற்சி செய்ததைத் தவிர வேறில்லை' (திருக்குர்ஆன் 53:39)

முயற்சி செய்வது நம் வேலை. வெற்றியைத் தருவது இறைவனின் கைகளில் உள்ளது. ஒரு குழந்தை நடக்கப் பழகும் போது நூறு முறை கீழே விழுகிறது. ஆனால் அது விழுந்ததோடு நிறுத்துவதில்லை. நூற்றோராவது முறை மீண்டும் எழுந்து நிற்கிறது பாருங்கள் அதுதான் உண்மையான முயற்சி.

நமது வாழ்வில் நாம் சாதிக்க நினைத்தால் மூன்று விஷயங்களை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

முதலாவது எதையும் சிறிதாகத் தொடங்குங்கள். இமயமலையில் ஏற வேண்டும் என்றாலும் முதல் அடியை எடுத்து வைக்க வேண்டும். ஒரு சிறிய முயற்சி தான் பின்னாளில் பெரிய மாற்றத்தை உருவாக்கும்.

இரண்டாவது தோல்விகளை நமக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராகப் பாருங்கள். தோல்வி அடைவது அவமானம் அல்ல; தோல்வி அடைந்தால் தான் எப்படி வெல்ல வேண்டும் என்ற பக்குவம் நமக்குத் தெரியும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஓர் இறைநம்பிக்கையாளனுக்கு ஏற்படும் எந்த ஒரு துன்பமும், அது முள் குத்தினால் கூட அவனுடைய பாவங்களுக்குப் பரிகாரமாக அல்லாஹ் ஆக்கிவிடுகிறான்' (ஸஹீஹுல் புகாரி 5641)

தாமஸ் ஆல்வா எடிசன் பல முறை தோல்விகளைச் சந்தித்த பிறகு தான் உலகிற்கு ஒளியூட்டும் மின் விளக்கைக் கண்டுபிடித்தார்.

மூன்றாவது, உங்களுக்காக முயற்சி செய்யுங்கள். அடுத்தவர்கள் கைதட்டுவதற்கோ, பாராட்டுவதற்கோ அல்லாமல்! இரவு தூங்கும் போது 'இன்று நான் என்னால் முடிந்த அளவு சிறப்பாகச் செயல்பட்டேன்' என்று நிம்மதியாகத் தூங்குவதற்காக நாம் உழைக்க வேண்டும்.

உங்கள் கனவு எவ்வளவு பெரியதாக இருந்தாலும் பரவாயில்லை; உங்கள் முதல் அடி சிறியதாக இருக்கட்டும். விழுந்தால் பரவாயில்லை, எழுந்திருங்கள். அழுதால் பரவாயில்லை, கண்ணீரைத் துடைத்துவிட்டு நடங்கள். தோற்றால் பரவாயில்லை, மீண்டும் முயற்சி செய்யுங்கள்.

ஏனெனில் உங்கள் காலடிகள் வெறும் தடயங்கள் அல்ல; அவை வரலாற்றின் சுவடுகளாக மாற வேண்டும்! 'என் இறைவா! எனக்கு உறுதியைத் தா. என் காரியத்தை எளிதாக்கு' என்று துஆ செய்து, நாம் எழுந்து நடப்போம்.

# 44 அக்கரைப் பச்சை

• ஜரினா ஜமால்

தங்கை சம்சு திருமணம் பற்றி விசாரித்ததுடன் இல்லாமல் தன் அபிப்பிராயங்களையும் சொல்ல ஆரம்பித்தாள்.

‘ஏங்கம்மா! சாலி அக்கா, இப்ப சென்னைக்குப் போகணும்னு என்ன தேவை இருக்கு?’

‘நாமெல்லாம் மதுரையில் இருக்கோம். அக்காவின் இனம், ஜனம், ஒட்டு, ஒறவெல்லாம் ஏர்வாடியில் இருக்கும் போது சென்னைக்குப் போக அவசியம் என்ன வந்துச்சு?’

‘சட்டியோடு போச்சு பலாய் நாத்தம்னு சென்னைய மச்சான் போனதோட முடிச்சிட வேண்டியதுதானே?’

அவள் பேசிக் கொண்டிருக்கும்போதே சித்திமா, ஆமினாக்கா மகன்கள் எல்லோரும் உள்ளே நுழைந்து விட்டார்கள்.

‘யாரால பாத்து பலாய்ன?’ பீவி அம்மாவின் தங்கச்சி கோவமா கேட்டாள்.

‘சம்சுமா கொஞ்ச நேரம் சும்மா இரு’ என்றாள் பீவி அம்மா. ஆனால் சம்சு தொடர்ந்தாள்.

‘சாலி அக்காவுக்கு எப்போதும் தன்னை அழகாக அலங்கரிச்சுக்கணும். மேச்சா சட்டை போடணும். கை நிறைய வளையல் போடணும். கண்ணுக்கு மை தீட்டணும். தலை நெறய்ய பூ வைக்கணும். இதெல்லாம் ஆசைதானேமா’

‘என்ன வயசாயிட்டு.. இன்னும் அக்கா இளமையா தான் இருக்கு’

‘நாமளே மதுரையில நல்ல மாப்பிள்ளைப் பார்த்து முடிச்சு வைக்கலாம்’

‘ஊர்ல தோப்பு, தொரவு, வீடு, வாசஇருக்கும்போது ஒத்த வயிறுக்கு சம்பாத்தியம் பண்ண ரயிலேறி போவணுமா?’

சம்மன் இல்லாம ஆஜராகி பேசிக் கொண்டிருக்கும் தங்கச்சியைப் பார்த்தாள் சாலிஹா.

எப்போதும் வீட்டில் இருப்பவருக்கு அவளைப் பார்த்தால் பயம்தான். எப்போதாவது வந்தாலும் ஏதாவது ஒரு பிரச்னையாகத் தான் இருக்கும். தன் கருத்தைச் சொல்கிறேன். மற்றவர்களுக்காகச் சிபாரிசு பண்ணுகிறேன் என்று குண்டக்க மண்டக்கப் பேசி வேதனையைத் தந்து போவாள். எங்கே போனாலும் என் தலை தான் உருள வேண்டுமா? சாலிஹா ஆதங்கப்பட்டாள். கண்கள் பொங்கிக் கொண்டு வந்தது.

சித்திமா வாயைத் திறந்தாள்.

‘சம்சு புள்ள ரொம்ப ஆச்சாரக் கிழவி மாதிரி பேசாத! பட்டவங்களுக்குப் புண்ணு.. படாதவர்களுக்குச் சந்தனம்’. ‘ஓர் அடுப்புல எரிந்த விறகு அந்த அடுப்புலயே எரிந்து முடியணும்’

‘நம்ம குடும்பத்துல இப்படி யாருக்கும் நடந்தது இல்லை. சின்னஞ்சிறு வயசுல சித்தருதலி ஆகிட்ட அவள ஆளாளுக்கு ஒவ்வொன்னா சொல்லாதீங்க.’

பீவி அம்மாவுக்குப் பயமாக இருந்தது. மூன்று மகளும் இருக்க, சித்திமா ஏதாவது சொல்ல சம்சு கத்திக்கிட்டு போயிருவாளோனு பயந்து போய் உட்கார்ந்து இருந்தாள்.

சம்சு அவளாக எல்லாம் பேசுவாள். ஆனால் அவளை யாரும் குத்தம் குறை சொன்னால் பொறுக்க மாட்டாள். இப்படியும் பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

‘சாச்சிமா நானா சொன்னேன்? எங்க தெருவுலயும் ஏர்வாடிக்காரங்க வீடு இருக்கு. அந்த ஷகிலா தாத்தாதான் கேட்டாங்க! உங்க தாத்தாவுக்குக் கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பாக்குறீங்களோ?’

ஊர்க்காரங்க மாதிரி நாக்க சுழற்றிப் பேசி காண்பித்தாள். எல்லோரையும் வக்கனை, வடிமானம் வைத்துப் பேசுவாள். வயதில் சில வருடங்கள் மூத்தவள் என்றாலும் விட்டு வைக்க மாட்டாள்.

சித்திமாவுக்குக் கோபம் வந்துவிட்டது. 'வாந்திலேயிருவானுங்க, ஒன்னுமத்து போயிருவானுங்க, இத்தனை வயதில் எம்புள்ள பேர கெடுத்துட்டானுவ. ஹயா கெட்ட மாடனுங்க'

சித்தியின் கோபக் குரலில் சம்சு கொஞ்சம் அடங்கினாள். தம்பி மனைவி ரஷிதா எல்லோருக்கும் பண்டம் பல காரங்கள் கொண்டு வந்து வைத்தாள். சூடாக காப்பியும் கலந்து எல்லோருக்கும் பரிமாறினாள். சாலிஹாவிடம் ஒரு கோப்பையை நீட்டினாள். கலங்கிய கண்களுடன் அவளை ஏறிட்டுப் பார்த்தாள் சாலிஹா.

எனக்கு மட்டும் ஏன் இப்படி ரஷிதா என்று கேட்பது போல் இருந்தது அந்தப் பார்வை. தன் கண்களை இறுக்கமாக மூடி, திறந்து பொறுமை செய்யுங்கள் என்பது போல் பார்த்து நகர்ந்தாள்.

ஆமினா அக்காவின் மகன் பக்கத்தில் வந்தான். சாலி சாச்சி அழுகை முட்டிக் கொண்டு வருது. 'மொதல்ல மொகத்தத் தொடைங்க. சின்ன சாச்சியைப் பற்றி உங்களுக்கும் எங்களுக்கும் நல்லாத் தெரியும். உங்களப் பத்தியும் எங்களுக்குத் தெரியும். தயவு செய்து கண்ட்ரோல் பண்ணுங்க சாச்சி'

அக்கா மகன் சொல்லவும் கூடக் கொஞ்சம் தான் அழுகை வந்தது.

'மதரஸாவுக்கு இடம் பார்த்தாயா?'

'சாச்சி! உங்கட்ட பேசணும்னு தான் வந்தேன். அதுக்குத் தகுந்த சூழல் இப்ப இல்ல. அப்புறம் ராத்திரிக்கு வாரேன். கொஞ்சம் பொறுமையா இருங்கள்'. சாலிஹா அவன் கைகளை இறுக்கிப் பிடித்து பக்கத்தில் அமர வைத்தாள்.

'போகாத! இப்பவே பேசி முடிவு எடுப்போம். உன் உதவி எனக்குக் கட்டாயமாகத் தேவைப்படுகிறது'

மனிதனின் மனம் சாதகமான சூழ்நிலையையே விரும்புகிறது. நினைத்த நேரத்தில் மழை வர வேண்டும் நினைத்த நேரத்தில் வெயில் அடிக்க வேண்டும். தனக்குப் பிடிக்காத விஷயம் என்றால் மனம் கசக்கிறது. கஷ்டப்படாமலேயே எல்லாம் கிடைத்து விட வேண்டும் என்று தள்ளாடுகிறது. மனித வாழ்க்கை ஒன்றும் காகிதப் படகல்ல காற்று அடித்த திசையில் ஓட..! மனித வாழ்வில் எதிர்நீச்சல் அடித்து போராடி வெற்றி பெற வேண்டும்.



மலை ஏறுபவன் சிராப்புகளை ஆராய்ந்து கொண்டும் தேன் வடிப்பவன் தேன் எடுப்பவன் தேன் அடைக்கு அஞ்சிக்கொண்டும் இருந்தால் அவன் எப்படி வாழ்க்கையில் முன்னேறுவான்? எனவே எழுத நினைத்த எதுவும் கிடைக்காது. சூழ்நிலைக்குத் தகுந்தார் போல் பயணத்தை மாற்றி அமைத்து வெற்றி பெற வேண்டும்.

இதை எப்படி சாச்சியிடம் தெளிவு படுத்த என்று ஆமினா அக்காவின் மகன் நினைத்தான்.

(தொடரும்..)

# சமரசம் புதிர் போட்டி 18

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article @gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகிய வற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகிய வற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. '(எனவே இன்று) அந்த அருளுக்குரியவர்கள் எத்தகையவர்களெனில், அவர்கள் 'உம்மீ' நபியாகிய இந்தத் தூதரைப் பின்பற்றுவார்கள்; இவரைக் குறித்து அவர்களிடமுள்ள தவ்ராத்திலும், இன்ஜீலிலும் எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். இவர் நன்மை செய்யுமாறு அவர்களை ஏவுகின்றார்; தீமைகளிலிருந்து அவர்களைத் தடுக்கின்றார். மேலும், அவர்களுக்குத் தூய்மையானவற்றை அனுமதிக்கின்றார்; தூய்மையில்லாதவற்றைத் தடை செய்கின்றார். மேலும், அவர்களின் மீதுள்ள சுமையை இறக்குகின்றார்; அவர்களைப் பிணைத்திருந்த விலங்குகளையும் உடைத்தெறிகின்றார். எனவே எவர்கள் இந்நபி மீது நம்பிக்கை கொண்டு இவரைக் கண்ணியப்படுத்தி, உதவியும் புரிகின்றார்களோ, மேலும் இவருடன் இறக்கியருளப்பட்ட ஒளியினைப் பின்பற்றுகிறார்களோ அவர்களே வெற்றியாளர்களாவர்' இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தியாயம்

   அ) அல் அஃராஃப் ஆ)அல் அன்ஃபால்
2. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் மறுமை நாளன்று பூமியைத் தன்னுடைய கையில் எடுத்துக் கொள்வான். வானத்தைத் தன்னுடைய வலது கையில் சுருட்டிக் கொள்வான். பிறகு கூறுவான்: 'நான்தான் அரசன். பூமியின் அரசர்கள் எங்கே போனார்கள்?' இந்த நபிமொழியை அறிவித்தவர்

   அ) அபூ மூஸா அஷ்அரி(ரலி)
   ஆ) அபூஹுரைரா(ரலி)
3. சுவனத்தைக் கொண்டு நற்செய்தி வழங்கப்பட்ட நபித் தோழர்களில் ஒருவர்

   அ) அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி)
   ஆ) பிலால்(ரலி)
4. அல்லாஹ்வின் திருப்தியும், கோபமும் யாருடைய திருப்தி, கோபத்தில் உள்ளது?

   அ) ஆசிரியர்கள் ஆ) பெற்றோர்கள்
5. கல்லணையைக் கட்டியவர்

   அ) கரிகால் சோழன் ஆ) சேரமான் பெருமான்
6. ஒரு TMC என்பது எவ்வளவு?

   அ) இரண்டாயிரம் மில்லியன் கன அடி
   ஆ) 100 கோடி கன அடி
7. தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு மூடப்பட்ட அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை

   அ) 208 ஆ) 114
8. வந்தே மாதரம் பாடலைத் திணிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோதா

   அ) FCRA மசோதா ஆ) தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு(திருத்த) மசோதா

## புதிர் போட்டி பதினாறிற்கான விடைகள்

1. ஆ) ஆல இம்ரான் 2. ஆ) முஸ்லிம் 3. ஆ) அட்டை 4. ஆ) டாக்டர் கீத் எல்.மூர் 5. ஆ)1857 6. ஆ) மௌலானா அபுல் கலாம் ஆசாத் 7. ஆ) அடிப்படை உரிமைகள் 8.ஆ) முராக்கபா

### சரியான விடையை எழுதியவர்கள்:

1. ஜா.ஜுனைதா பேகம், பரங்கிப்பேட்டை 2. சோழா புகழேந்தி, கரியமாணிக்கம் 3. அ.ரிஹானா பர்வீன், பொதக்குடி, 4. பிர்தௌஸ், திருநெல்வேலி 5. பர்சானா பர்வீன், ஆழ்வார் திருநகரி 6. H. நபிசா, சென்னை 7. H. முஹம்மது ஹஸன், குன்னூர் 8. H. ஷாகுல், கொரக்கவாடி 9. முஹம்மது சுலைமான் இல்யாஸ், பரக்க தாபாத் 10. முஹம்மத் உவைஸ், ஏர்வாடி 11. ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம் 12. தா.சுபின் பர்வீன், மணப்பாறை 13. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 14. T.A. அயானா, கடையநல்லூர் 15. A. கௌஸ் மீரான், திருநெல்வேலி 16. ந.அனிபா, நாமக்கல் 17. எஸ்.ஏ. அமீர் அலீ, கிள்ளை

**பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:**

**பிர்தௌஸ், திருநெல்வேலி**

# எண்ணம் போல் வாழ்வு

நம்முடைய எண்ணம் தான் நம்முடைய வாழ்க்கைச் சக்கரமாகச் சுழல்கிறது. ஆகவே எண்ணத்தைச் சரி செய்து கொள்ள வேண்டும்.


எண்ணத்தைச் சரி செய். எண்ணம் தான் சிந்தனையாகும். சிந்தனையைச் சரி செய். சிந்தனை தான் செயலாகும். செயலைச் சரி செய். செயல்தான் வழக்கமாகும். வழக்கத்தைச் சரி செய். வழக்கம் தான் வாழ்க்கையாகும்.

வாழ்க்கையே வரலாறாகும். வாழ்க்கை வரலாறே மறுமையில் ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்படும் நன்மை தீமை பதிவேடு பட்டோலையாகும்.


ஆகவே வந்து மறையும் எண்ணத்தையும் நின்று உறையும் சிந்தனையையும் சரி செய்வோம் சிறப்புப் பெறுவோம்.

- ர.தௌலத் தஸ்னீம்,
*12*ஆம் வகுப்பு,
ஆசாத் பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
மயிலாடுதுறை

## சித்திரம் பேசுது..!



Y. Mahira, Grade-4
சாந்தி நிகேதன் இந்தியன் பள்ளி,
தோஹா, கத்தார்



S. சபீஹா, 7ஆம் வகுப்பு, இஸ்லாமிய மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி,
கரும்புக்கடை, கோவை

***அன்புச் செல்லங்களே..!*** இது உங்கள் பக்கம். சிறுகதை, கவிதை, துணுக்கு, விடுகதை என நீங்கள் எதுவும் எழுதலாம்! இங்கு இடம்பெற்றுள்ள அழகிய வண்ண ஓவியங்களைப் போல நீங்களும் ஓவியங்கள் வரைந்து அனுப்பலாம். வாட்ஸ்அப்பில் அனுப்ப: **7305040386**

அனுப்ப வேண்டிய முகவரி : *சிறார் உலகம், சமரசம் மாதமிருமுறை இதழ்*
IFT லேன், *138* பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - *600012*

# நேபாளத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் நேரடி கள ஆய்வு



கடந்த ஆகஸ்ட் 26 அன்று நேபாளத்தின் போத்தே கோஷி - திரிசூலி நதிப் படுகைப் பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான திடீர் வெள்ளப் பெருக்கைத் தொடர்ந்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் துணைத் தலைவர் பேராசிரியர் சலீம் எஞ்சினியர் தலைமையில் ஜமாஅத் உயர்நிலைக் குழு நேபாள தூதரகத்துக்குச் சென்றது. அகில இந்தியச் செயலாளர்கள் ஷஃபி மதனி, I.கரீமுல் லாஹ், அதீகுர் ரஹ்மான் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந் தனர். தூதரக அதிகாரியும் தூதரக ஒருங்கிணைப்பாளருமான பிரகாஷ் மல்லாவை இக்குழுவினர் சந்தித்துப் பேசினர்.



இதனைத் தொடர்ந்து கள நிலவரத்தை ஆய்வு செய்வதற்காக ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் மூன்று பேர் கொண்ட தூதுக்குழு நேபாளத்திற்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டது. இக்குழு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று மக்கள், உள்ளூர் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி, பேரிடரால் ஏற்பட்டுள்ள மனித நேயத் தேவைகளை மதிப்பீடு செய்தது. கள ஆய்வின் முடிவுகள், பரிந்துரைகளின் அடிப்படையில், நேபாள நாட்டின் சட்ட திட்டங் களுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் உட்பட்டு அவசரகால நிவாரண நடவடிக்கைகளை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தொடங்கியுள்ளது.



ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் தேசியச் செயலாளர் மௌலானா ஷஃபி மதனி, ‘பேரழிவின் தாக்கம் மிகக் கடுமையாக உள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவு, தங்குமிடம், மருத்துவ உதவி, பாதுகாப்பான குடிநீர் பிற அத்தியாவசியப் பொருட்களை உடனடியாக வழங்குவதே முதன்மைப் பணியாக உள்ளது’ என்று குறிப்பிட்டார்.

நேபாள அரசும் அதன் பேரிடர் மீட்பு அமைப்புகளும் மிகுந்த சவாலான சூழலிலும் பாராட் டுக்குரிய பணிகளைச் செய்து வருகின்றன. எனினும் பேரிடரில் குடும்பத்தினர், வீடுகள், வாழ்வாதாரம், உடமைகளை இழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து நேபாள அரசு இதுவரை எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடாதது கவலைக்குரிய அம்சம்’ என்று மௌலானா ஷஃபி மதனி சுட்டிக்காட்டினார்.

கள நிலைமையைக் கவனித்ததன் அடிப்படையில், உள்ளூர் சட்ட விதிகளுக்கு உட்பட்டு மட்டுமே இக்கட்டத்தில் வரையறுக்கப்பட்ட அவசரகால நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியும். மீட்புப் பணிகள் முழுமையாக முடிவடைந்து, இழப்புகள் துல்லியமாக மதிப்பிடப் பட்டு, மக்களின் தேவைகள் தெளிவாகத் தெரியவந்த பின்னரே நீண்டகால மறுவாழ்வு, மறுகட்ட மைப்புப் பணிகளை மேற்கொள்ள இயலும். நிவாரணப் பணிகளுக்குச் சாத்தியமான அனைத்து உதவிகளையும் செய்ய ஜமாஅத் தயாராக உள்ளதாக இக்குழு அறிவித்துள்ளது.

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

# ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

# WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of WCA INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 16 - 30 SEPTEMBER 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

- இறைவன் உங்கள் உருவங்களையோ செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களையும் செயல்களையும் பார்க்கின்றான்.

  – முஹம்மது நபி(ஸல்) அவர்கள்

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**